மில்க்வைற்
சலவைத்தூள்
50 கிராம் பக்கற் ஒன்று ரூபா 6/- மட்டுமே.
25 வெற்றுப் பக்கற்றுக்கு ஓர் அப்பியாசக் கொப்பி அன்பளிப்பு.

மக்கள்! ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மில்க்வைற்
நீலசோப்
கட்டி ஒன்று ரூபா 6/- மட்டுமே.
25 மேலுறைகளுக்கு ஓர் அப்பியாசக் கொப்பி அன்பளிப்பு

சுடர்10 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 13 சனிக்கிழமை (27 – 05 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 181

## சந்திரிகாவின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்படும்

கொழும்பு, மே 27

ஜனாதிபதி சந்திரிகாவின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்படும் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுக்கு மேலும் 200 பேர் சேர்க்கப்படுவர் என்றும், அதன் மூலம் பிரஸ்தாப பிரிவின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 400 ஆக உயரும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஐ.தே.க. அரசாங்க காலத்தில் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் மொத்தம் 600 உத்தியோகத்தர்கள் இருந்தனர்.

புதிய அரசு பதவிக்கு வந்ததும் அவர்கள் வெளியிடங்களுக்கு அனுப்பப்பட்டனர். அவர்களில் 20 பேரை மட்டுமே மீண்டும் திருப்பி அழைக்க முடிந்தது.

இப்போது இப்பிரிவில் உரிய பயிற்சி அளிக்கப்பட்ட பின்னர் புதியவர்களே சேர்க்கப்பட்டுள்ளனர். (அ)

முச்சந்திமுரளி



தேரரின் அதிரடிப் படையினர் புத்திசாலிகள் பாருங்கோ......!

# பொலன்னறுவை விகாரையின் பிரதம குரு சுட்டுக் கொலை

கொழும்பு, மே 27

பொலன்னறுவை சம்மன் கடவ பிரதேச பிரதம சங்க நாயக்கர் சங்கைக்குரிய சித்திரகம சிலாங்கார நாயக்க தேரர் (72 வயது) நேற்றுக் காலை சுட்டுக் கொல்லப்பட்டார்.

சிலபிலாக்கடவ விகாரையில் இருந்து இரண்டரைக் கிலோ மீற்றர் தூரத்தில் நேற்றுக் காலை 7-15 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இவர் தமது சாரதியுடனும், மற்றொரு நபருடனும் பிக்கப் வாகனம் ஒன்றில் சென்று கொண்டிருந்த போதே சுடப்பட்டார்.

தேரரின் சாரதி ஆன்ரன் சில்வாவும் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தார்.

இவர்களுடன் கூடச்சென்ற பௌத்தசார என்பவர் காயங்களுடன் பொலன்னறுவை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தேரர் வழமை போல் தமது விவசாய நிலத்துக்குச் சென்று கொண்டிருந்த போதே சுடப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது [இ-3]

## அதிரடிப் படையினர் கூடச் செல்லவில்லை

கொழும்பு, மே 27

பொலன்னறுவை சம்மன்கடவ பிரதேச பிரதம சங்கநாயக்கர் சிலாலங்கார நாயக்க தேரரின் பாதுகாப்புக்காக இராணுவப் பயிற்சி பெற்ற அதிரடிப்படையினர் 10 பேர் கொண்ட குழு ஒன்று இருந்த போதிலும் நேற்று சம்பவம் நிகழ்ந்த போது பாதுகாப்புக் குழுவினர் அவருடன் சென்றிருக்கவில்லை.

சம்பவம் நடந்த நேரத்தில் பாதுகாப்புக் குழுவினர் திம்புலாகல விகாரையில் தங்கியிருந்தனர். (இ-3)

# சிங்களவர் - முஸ்லிம்கள் 42 பேர் திருமலையில் சுட்டுக் கொலை

## அவர்களின் குடிசைகளும் தீக்கிரை

யாழ்ப்பாணம், மே 27

திருகோணமலையில் 42 முஸ்லிம்களும், சிங்களவரும் கொல்லப்பட்டுள்ளனர். நேற்று நள்ளிரவு இச்சம்பவம் இடம்பெற்றது. திருமலையில் உள்ள புல்மோட்டையில் கல்லராவ என்ற மீனவ கிராமத்தில் இக்கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குடியேற்றக் கிராமமான கல்லராவவில் சிங்களவரும், முஸ்லிம்களுமாக 65 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இக்கிராமத்துக்கு ஸ்ரீலங்கா இராணுவத்தின் சிங்க படைப் பிரிவு பாதுகாப்பு வழங்கி வருகிறது.

நேற்றைய சம்பவத்தில் கொல்லப்பட்ட மக்களில் அநேகமானோர் சிங்களவர்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பூரண விசாரணைக்கு சந்திரிகா நேற்று உத்தரவு

கொழும்பு, மே. 27

சிலாலங்கார நாயக்கதேரரின் கொலை தொடர்பாக பூரண விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொலீஸ்மா அதிபரைப் பணித்துள்ளார்.

இதனையடுத்து விசேட பொலீஸ் குழு ஒன்று விமானத்தில் சம்பவம் நடந்த இடத்துக்கு சென்றுள்ளது.

[இ-3]

## வடக்கு-கிழக்கு படையினருக்கு இரசாயன தாக்குதல்களை எதிர் கொள்ள பயிற்சி!

கொழும்பு. மே. 27

விடுதலைப் புலிகள் இரசாயன அல்லது வாயுத் தாக்குதலை நடத்தும் பட்சத்தில் —

அதிலிருந்து எவ்வாறு தப்புவது — பாதுகாப்புப் பெறுவது என்பது குறித்து —

இராணுவம் இப்போது தமது சிப்பாய்களுக்கு பகுதி பகுதிகளாகப் பயிற்சி அளித்து வருகிறது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய பகுதிகளில் பணிபுரியும் படையினருக்கு இராணுவ டாக்டர்கள் பயிற்சி அளித்து வருகிறார்கள்

இரசாயன ஆயுதத் தாக்குதலில் இருந்து படையினர் தம்மைப்பாதுகாத்துக் கொள்வதற்கான பயிற்சி கடந்த செவ்வாய்க்கிழமை அநுராதபுரம் இராணுவத் தலைமை அலுவலகத்தில் வழங்கப்பட்டது.

இதே வேளை அநுராதபுரம், பொலநறுவை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளில் பணிபுரியும் டாக்டர்களுக்கும் இரசாயன ஆயுதத் தாக்குதலுக்கு ஆளானோருக்கு சிகிச்சை அளிப்பது குறித்தும் பயிற்சிகள் வழங்கப்பட்டன. (அ)

## கொலைக்கான பொறுப்பை அரசே ஏற்கவேண்டும்

### ஐ.தே.க. கூறுகிறது

கொழும்பு.மே 27

பொலன்னறுவையில் சுட்டுக்கொல்லப்பட்ட சிலாலங்கார நாயக்க தேரருக்கு அரசு தகுந்த பாதுகாப்பு வழங்கவில்லை என்று ஐ.தே. கட்சி குற்றஞ்சாட்டி உள்ளது.

இவருக்கு தக்க பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று அரசை ஐ.தே.க கோரி இருந்தது என்றும் —

இதனைப் புறக்கணித்த அரசே இப்படுகொலைக்கான தார்மீக பொறுப்பை ஏற்கவேண்டும் என்றும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (இ-3)

## 44 தமிழ்க் குடும்பங்கள் லிங்க நகரில் வெளியேற்றம்

யாழ்ப்பாணம், மே 27

தமது இராணுவ பயிற்சித்தள பாதுகாப்புக்காக திருகோணமலை லிங்க நகரில் வாழும் 44 தமிழ் குடும்பங்களை தமது வீடுகளில் இருந்து வெளியேறுமாறு இராணுவம் உத்தர விட்டுள்ளது.

திருமலை நகருக்கு அண்மையில் உள்ள "பிளாண்டன் போயின்ற்" இராணுவ பயிற்சித்தள பாதுகாப்புக்கு எனக் கூறியே இந்தக் குடும்பங்கள் வெளியேற்றப்படுகின்றன.

லிங்கநகர் வீடுகளை இடித்து தரைமட்டமாக்கி அவ்விடத்துக்கு இராணுவ தளத்தை விஸ்தரிக்கும் திட்டம் இராணுவத்திடம் உள்ளதாக தெரிகிறது. (இ-3)

# கிழக்கில் புலிகள் மேலோங்குகின்றனர்

## மூத்த இராணுவ அதிகாரி தகவல்

கொழும்பு, மே 27

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்தது போல, கிழக்கில் விடுதலைப் புலிகளின் நிலை மீண்டும் மேலோங்கி வருவதாகவும் —

இராணுவம்கட்டுப்பாட்டை இழந்த பழைய நிலைக்கு வந்துள்ளதாகவும் —

மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் கூறியதாக 'ரொய்ட்டர்' செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

விடுதலைப் புலிகள் இப்போது வடக்கைத் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார்கள். கிழக்கையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கே இப்போது தாக்குதல்களை நடத்துகிறார்கள் —

கிழக்கிலும் அவர்களை நிலைகொள்ள அனுமதித்து விட்டால் தமிழீழத்தை நிறுவும் அவர்களது நோக்கம் நிறைவேறிவிடும் —

ஆகையால் கிழக்கு மிகவும் பிரதான இடமாகும். புலிகள் இப்போது கிழக்கின் மீது தமது கவனத்தைச் செலுத்தி அடிக்கடி தாக்குதல்களை நடத்துகிறார்கள்.—

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்களக் குடியேற்றத்தை முன்நின்று நடத்தியவர்

கொழும்பு, மே 27

பொலன்னறுவையில் நேற்று சுட்டுக்கொல்லப்பட்ட சித்திரகம சிலாலங்கார நாயக்க தேரர் கிழக்கு மாகாண எல்லைப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை அமைப்பதில் முக்கிய பங்கு வகித்தவர் என்று பி. பி. ஸி மற்றும் வெரித்தாஸ் வானொலிகள் தெரிவித்தன.

தமிழ்மக்களின் தாயகப் பிரதேசத்தை கபளீகரம் செய்து சிங்களக் குடியேற்றங்களை அமைப்பதில் அவர் முன்னணி வகித்தார் என்றும்—

இதற்காக அவருக்கு சிங்கள அரசுகள் பலத்த பாதுகாப்பு வழங்கி வந்ததாகவும்—

அவர் விடுதலைப் புலிகளை பகிரங்கமாக விமர்சித்து வந்தார் என்றும் — பி. பி. ஸி தெரிவித்தது.

அவருக்கு அரசு பூரண பாதுகாப்பு வழங்கியிருந்தபோதும், சம்பவதினம் அவர் பாதுகாப்பின்றியே சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. [இ-3]

## வேட்டைக்கு சென்ற நபர் படையினர் வேட்டுக்கு பலி!

### இயக்கச்சி பகுதியில் சம்பவம்

தென்மராட்சி,மே 27

நேற்றைய தினம் பன்றி வேட்டைக்கு சென்ற குடும்பஸ்தர் ஒருவர் இயக்கச்சிப் பகுதியில் படையினரின் வேட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

பளை தர்மக்கேணி சின்னத்தாளையடியைச் சேர்ந்த குலசேகரம் நகுலேஸ்வரன் (வயது 31) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு பலியானார்.

வழமையாக வேட்டைக்குச் செல்லும் இவர் சம்பவ தினம் வழிமாறி படையினரின் காவலரண்களுக்கு சமீபமாகச் சென்றவேளை படையினரின் சூட்டுக்கு இலக்கானார்.

இவரது சடலம் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-117)

# அமைச்சர் தொண்டாவுக்கு எதிராக ஐ.தே.கவே நடவடிக்கை எடுக்கும்

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனை இந்திய விடுதலை வீரர் பகத்சிங்குக்கு ஒப்பிட்டுக் கருத்து வெளியிட்டமைக்காக —

அமைச்சர் தொண்டமான் மீது ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுக்க உள்ளது.

அமைச்சர் தொண்டமான் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் மூலமே நாடாளுமன்ற உறுப்பினராகியவர் என்றும் —

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அவர் அமைச்சராக இருந்த போதிலும் —

இன்னமும் ஐ.தே.க நாடாளுமன்றக் குழு உறுப்பினராகவே கருதப்படுகிறார் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ.தே.கட்சியின் செயற்குழு அடுத்த மாதம் ஐந்தாம் திகதி கூடவுள்ளது. அமைச்சர் தொண்டமான் வெளியிட்ட கருத்துக்கு அவருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் கோரும் பிரேரணை ஒன்று கொண்டுவரப்படும் — எனவும் ஐ.தே.க. வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இதேவேளை அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் அமைச்சர் தொண்டமான் மீது நடவடிக்கை எடுக்குமாறு கட்சி மேலிடத்தைக் கோரவுள்ளனராம். (அ)

## கொழும்பில் பாதுகாப்பு உஷார்படுத்தப்பட்டது!

கிழக்கு மாகாணம் கன்னாறில் நடத்தப்பட்ட தாக்குதல் மற்றும் பொலன்னறுவை விகாரை பிரதம பௌத்த தேரரின் படுகொலை ஆகிய சம்பவங்களை அடுத்து கொழும்பில் நேற்று ஆகக் கூடிய பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

கொழும்பில் சில பகுதிகளில் பதற்றம் நிலவியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மக்கள் மத்தியில் கலவரத்தை தூண்டிவி— எடுக்கப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பலில் வந்த ரின்மீனில் கடற்படையினர் சந்தேகம்

மாலைதீவில் இருந்து காலித்துறைமுகத்துக்கு கப்பலில் ஏற்றிவரப்பட்ட பெருந்தொகையான 'மீன் ரின்களை' காலி துறைமுகத்தில் இறக்குவதில் கடற்படையினருக்கு சந்தேகம் ஏற்பட்டதை அடுத்து அக்கப்பல் 'மீன் ரின்'களுடன் கொழும்பு துறைமுகத்துக்கு திருப்பி அனுப்பப்பட்டது

கடந்த திங்களன்று மாலை அந்தக் கப்பலில் இருந்து ஒரு தொகுதி மீன் ரின்கள் கொள்கலனில் இறக்கப்பட்டன.

மீன் ரின்கள் இறக்கி அடுக்கப்பட்டிருந்த விதம் அங்கு நின்ற கடற்படையினருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. அந்த மீன்ரின்களில் வேறு ஏதாவது பொருள்கள் அடைக்கப்பட்டிருக்கலாம் என அஞ்சிய கடற்படையினர் இறக்கப்பட்ட மீன் ரின்களை கொள்கலனிற்குள் இட்டு சீல் வைத்து துறைமுகத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

இறக்கப்படாத எஞ்சிய மீன் ரின்களுடன் அந்தக் கப்பல் கொழும்பு துறைமுகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக காலி துறைமுக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# அமெரிக்க வானொலி நிலைய நிர்மாணப் பணி மீண்டும் தொடங்கும்

## நாடாளுமன்றம் அதற்கு அனுமதி

கொழும்பு, மே27

சர்ச்சைக்குரிய அமெரிக்க வானொலி நிலைய நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நாடாளுமன்றம் இணக்கம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் இது தொடர்பான பிரேரணை நேற்று பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. எதிராக நான்கு வாக்குகள் மட்டுமே அளிக்கப்பட்டன.

அரசும், எதிர்க்கட்சிகளும் இத்தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன.

[illegible] வானொலி நிலையம் அமைக்கப்பட்டிருந்தது. அப்பகுதி மக்கள் தெரிவித்து வந்த பலத்த எதிர்ப்பை அடுத்து நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இந்த வானொலி நிலையம் அமைப்பது தொடர்பாக அமெரிக்க அரசுடன் ஐ.தே.க. அரசு செய்துகொண்ட உடன்படிக்கை ராஜதந்திர சர்வதேச அந்தஸ்து பெற்றது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மண்எண்ணெயுடன் மாஹோ இன்று புறப்படும்

யாழ்ப்பாணம், மே 27

வடபகுதிக்கான ஒரு தொகுதி பரல் மண்ணெண்ணெயுடன் "மாஹோ" கப்பல் நாளை மறுதினம் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கப்பல் இன்று வடக்கு நோக்கிப் புறப்படவிருப்பதாக நேற்று செயலகத்துக்கு தகவல் கிடைத்தது.

இக்கப்பலில் 12 ஆயிரம் பரல் மண்ணெண்ணெய் ஏற்றிவர ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதும், அதற்கும் குறைவான பரல் மண்ணெண்ணெயே ஏற்றிவரப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பலில் மண்ணெண்ணெய் பரல்களை ஏற்றுவதற்கும், கப்பல் கொழும்பு துறைமுகத்தை விட்டு புறப்படுவதற்கும் படையினர் தடை விதித்து வந்தமை தெரிந்ததே. (ஐ 3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

★ போட்டோ பிரதி (நிழற்பட பிரதி) யாளர்
★ ஆங்கில, தமிழ் தட்டெழுத்தாளர்
★ றோனியோவாளர்
★ பெண் விற்பனையாளர் தேவை

இதில் நன்கு அனுபவமுள்ளோர், நேரில் உரிய தகைமையுடன் வரவும்.

**யாழ். மருந்தகம் (வெஸ்கோ)**
**470 (250) ஆஸ்பத்திரி வீதி,**
(ஒ பீ. டி முன்பாக)
யாழ்ப்பாணம்!

[சி-1428]



## காணவில்லை

18-5-95 இரவு எட்டு (8) மணி அளவில் மானிப்பாய் கிழக்கு, மானிப்பாய் என்ற இடத்தில் யப்பான் ஏசியா சைக்கிள் காணாமல் போய் விட்டது. சைக்கிள் இல. 002 AB 9988 கண்டவர்கள் தயவு செய்து கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும் கொலிவூட் சலூன், சுன்னாகம் சந்தி.

[8414]



## மாணவர்
# கலைப் பூங்கா 2

இடம் : கிளி / பளை மத்திய கல்லூரி
காலம்: 27 - 05 - 1995 சனிக்கிழமை
மாலை 7-00 மணி

### நிகழ்வு நிரல்

ஆரம்ப நிகழ்வாக.........

★ ஈகச் சுடரேற்றல்
திரு. பொன். தியாகம் அவர்கள்
(பொறுப்பாளர், மாவீரர் பணிமனை தமிழீழம்)
திரு. ஏ. வீமன்
(பொறுப்பாளர், தென்மராட்சிக் கோட்டம்)
★ அமைதிவணக்கம்
★ தமிழ்த்தாய் வாழ்த்து
(கிளி/பளை மத்திய கல்லூரி மாணவிகள்)
★ வரவேற்புரை
குழையூரான் திரு. ச. மார்க்கண்டு அவர்கள்
(ஆசிரியர் யாழ்/டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி)
★ தலைமையுரை
திரு. ந. இன்பன் அவர்கள்
(பொறுப்பாளர், விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு தமிழீழம்)
★ தொடக்கவுரை
திரு. க. எழிலன்
(பொறுப்பாளர், விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு, சாவகச்சேரி கல்விக்கோட்டம்)
★ சிறப்பு விருந்தினர் உரை
● செல்வி சு. மகேஸ் அவர்கள்
(பொறுப்பாளர், கலை பண்பாட்டுக் கழகம், மகளிர் அமைப்பு, தமிழீழம்)
● திரு. நா. க. சண்முகநாதபிள்ளை
(செயலாளர், தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை)
● திரு ம. வெற்றிச்செல்வன் அவர்கள்
(பொறுப்பாளர், அரசியற் துறை, தென்மராட்சிக் கோட்டம்)
★ பிரதம விருந்தினர் உரை
திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் அவர்கள்
(பொறுப்பாளர், அரசியற்துறை, தமிழீழம்)
★ சான்றிதழ்கள், பரிசில்கள் வழங்குதல்
★ நன்றியுரை
திரு. ச. நெடுஞ்செழியன் அவர்கள்
(இணைப்பாளர், கலை பண்பாட்டு பிரிவு வி. பு. மா. அமைப்பு தமிழீழம்)

கலை நிகழ்வாக.........

★ மாவீரவணக்கம்-நாடகம்
(பாரதி சிவயோகநாதன் நாட்டியக்கலாலயம் தென்மராட்சி)
★ செந்நெறி இசை
(யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி)
★ கிராமிய இசை
(யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா-வித்தியாலயம்)
★ ஆக்க இசை
(யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி)
★ வில்லுப்பாட்டு
(யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்)
★ நாட்டுக்கூத்து
(யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்)
★ கடல் போக்கெல் - நவீன நாடகம்
(யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்)

நன்றி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கலை பண்பாட்டுப் பிரிவு,
விடுதலைப் புலிகள்
மாணவர் அமைப்பு,
தமிழீழம்.

[சி-1271]


லொறிகள் செல்ல படையினர் கெடுபிடி!

# அத்தியாவசிய பொருள்களுக்கு கிளிநொச்சியில் தட்டுப்பாடு

கிளிநொச்சி, மே 27

கிளிநொச்சி மாவட்டத்துக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல வவுனியாவில் படையினர் தடை விதித்துள்ளதால் அங்கு அத்தியாவசியப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

கடந்த மூன்று வாரங்களாகவே உணவுப் பொருள்கள் எவையும் கிளிநொச்சிக்கு எடுத்துச் செல்லப்படாததால் அங்குள்ள சுமார் 2 லட்சம் மக்கள் பாதிப்புற்றுள்ளனர்.

கடந்த 4ஆம் 5ஆம் திகதிகளில் 30 லொறிகளில் மா கிளிநொச்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டது அதன்பின் இன்று வரை வேறு எந்த உணவுப் பொருள்களும் கொண்டு செல்லப்படவில்லை.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு மாதாந்தம் 300 லொறி உணவுப் பொருள்கள் தேவை.

அதேசமயம், இம்மாவட்டத்துக்கு விவசாய பசளை வகைகள் கொண்டு செல்வதும் தடுக்கப்பட்டுள்ளது.

தற்போது வேளாண்மைக் காலமாகையால் உடனடியாக 50 லொறி பசளை இங்கு தேவைப்படுகிறது.

கடந்த 5ஆம் திகதிக்குப் பின் தபால்கள் எதுவும் வவுனியாவில் இருந்து எடுத்துச் செல்லப்படாததால் கிளிநொச்சியில் தபால் விநியோகமும் பாதிக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

## “சட்டத்தின் திறவுகோல்” சஞ்சிகை

யாழ்ப்பாணம், மே. 27

தமிழீழ நீதி நிர்வாகத் துறையினரால் வெளியிடு செய்யப்பட்ட “சட்டத்தின் திறவுகோல்” என்னும் சஞ்சிகை வெளிவந்துள்ளது.

இதில் தேசியத்தலைவரின் உரையிலிருந்து, எமது பார்வையில், குடியியல் விடயத்தின் முதன்மைகள், நிர்வாகத்தில் தீர்மானம் எடுத்தல், யாதார்த்தம் [உண்மைச்சம்பவம்], யூரல்லா நீதிமன்ற விளக்கம், சட்டநூல்களின் அறிமுகம் மற்றும் கேள்வி பதில், கவிதைகள் ஆகிய அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. (ஒ)

## திருட்டு

தென்மராட்சி மே, 27

வரணி குடமியனில் வீடு உடைத்து 25 ஆயிரம் பெறுமதியான பொருள்கள் திருடப்பட்ட சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம் பெற்றது.

இத் திருட்டுத் தொடர்பாக சாவகச்சேரிகாவல்துறையினர் சந்தேகத்தின் பேரில் மூவரைக் கைது செய்ததுடன் ஒரு தொகுதி பொருள்களையும் மீட்டெடுத்துள்ளனர்

[ஒ-117]

## ப. நோ. கூ. சங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு

வடமராட்சி, மே 27

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு இம்மாதம் முதல் முப்பது வீத சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது.

இதற்கான தீர்மானம் சங்கத் தலைவர் திரு வே. சிவசுப்பிரமணியதேவா தலைமையில் நடைபெற்ற சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. [ஒ-173]

## கல்குடா சிங்கள மீனவர் தெற்கே திரும்புகின்றனர்

மட்டக்களப்பு, மே. 27

மட்டக்களப்பு, கல்குடா பகுதியில் தொழிலில் ஈடுபட்டு வந்த சிங்கள மீனவர்கள் தென் இலங்கைக்குத் திரும்பிச் செல்வதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கிழக்கில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்திருப்பதை அடுத்தே, சிங்கள மீனவர்கள் அங்கிருந்து வெளியேறிச் செல்வதாகக் கூறப்படுகிறது.

கல்குடாவில் உள்ள சிங்கள மீனவர்கள், தென் இலங்கையில் இருந்து சென்று அங்கு பலாத்காரமாக குடியேறியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

## ‘வானம்எம்வசம்’ வெளியீடு கைலாசபதி கலையரங்கில்

யாழ்ப்பாணம், மே 27

விடுதலைப் போராட்டத்தின் புதிய பரிமாணமாக வானத்தைப் புலிகள் வெற்றி கொண்ட நிகழ்வைப் பிரதிபலிக்கும் கவிதைத் தொகுதி —தமிழ்த் தாய் வெளியீடான ‘வானம் எம் வசம்’ வெளியீட்டுவிழா —நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

விமானப்படையின் இரண்டு விமானங்கள் விடுதலைப்புலிகளால் சுடப்பட்டு எம்மண்ணில் வீழ்ந்ததைப் பார்த்துப் பரவசப்பட்ட 29 கவிஞர்கள் எமது மண்ணின் மகிழ்ச்சிக் குறியீடாக ஆனந்தக்களிப்புடன் பாடிய கவிதைகளாக ‘வானம் எம்வசம்’ வெளியிடப்படுகிறது.

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் வெளியீட்டுரையை விடுதலைப்புலிகள் வெளியீட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. சு. ரவியும், மதிப்பீட்டுரைகளை கலாநிதி. நா. சுப்பிரமணியன் கவிஞர், திரு. முருகையன், திரு வே. பாலகுமாரன் ஆகியோரும் ஆற்றுகின்றனர்.

சுடப்பட்ட விமானம் வீழ்ந்து நொருங்கிய வீட்டின் உரிமையாளர் மங்கல விளக்கேற்றி வைக்க, விமானப் படை விமானங்களின் குண்டு வீச்சில் உயிர்ப்பலியானவர்களின் குடும்பத்தினர் அன்பளிப்பு பிரதிகளை வழங்குவர்.

மகிழ்ச்சிக்குரிய இந்த வரலாற்று நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும்படி தமிழ்த்தாய் வெளியீட்டகமும் விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுகழகமும் அழைப்பு விடுத்துள்ளன. (ஒ)

சாவகச்சேரி லயன்ஸ் ஏற்பாட்டில்

## கண் சிகிச்சை முகாமில் 275 பேருக்கு சோதனை

தென்மராட்சி, மே. 27

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடத்தப்பட்ட கண் சிகிச்சை முகாமில் 275 பேருக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டது.

யாழ். போதனா வைத்திய சாலை கண் சிகிச்சை நிபுணர்களான டாக்டர் எஸ் யோகராசா, டாக்டர் (செல்வி) ம. சரவணமுத்து ஆகியோரால் இச்சிகிச்சை முகாமில் பரிசோதனை நடத்தப்பட்டது.

கண் பரிசோதனை நடத்தப்பட்டவர்களுக்கு விரைவில் மூக்குக் கண்ணாடி வழங்கப் படவுள்ளதாக லயன் கா. நவரத்தினம் தெரிவித்தார்.

## புலிகளின் குரல் வானொலியில்

27 05 1995
சனி இரவு
★ 8-02 — புரட்சிக்குரல்
★ 8-05 — நிகழ்வும் பகிர்வும்
★ 8-20 — நேயர் கடிதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — கலந்துரையாடுவோம் — “அறிவியல் வரலாற்றில் பறப்புகள்”

28 — 05 — 1995
ஞாயிறு காலை
★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

சனி மாலை
★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக் கீதம்
★ 5-10 புதியவை
★ 5-15 — வேங்கையின் நெஞ்சம்
★ 5-30 — அறிவியல் வினாடி வினாப் போட்டி “இளவாலை புனிதஹென்றியரசர் கல்லூரி — மானிப்பாய் மெமோறியல் கல்லூரிகளுக்கிடையிலான இறுதிப் போட்டி.
★ 6-00 — [illegible] சிறு விநாடிகள்
★ 6-02 — [illegible]
★ 6-15 — என் தெரிவு

## ஆசிரியர்கள் இறுதி வரை கல்வியைத் தொடர வேண்டும்

### ‘ஆசிரியம்’ வெளியீட்டுவிழாவில் உரை

அச்சுவேலி, மே 27

“ஆசிரியர்கள் கல்வியில் மாணவர்களாகத் திகழவேண்டும். கற்றுக்கொண்டே இருக்கவேண்டும். இறுதிமட்டும் கல்வியைத் தொடர வேண்டும்— தேடவேண்டும். அதனை பொருத்தமான முறையில் மாணவர்களுக்கு வழங்கவேண்டும்”

அருட்திரு பிரான்சிஸ் யோசவ் அடிகளார் இவ்வாறு கூறினார்.

யாழ், வடக்கு கல்வி வலயம் இந்து மகளிர் கல்லூரி தேசியகல்வி நிறுவக பட்டப்பின் கல்விடிப்ளோமா பயிற்சியாளர்களின் “ஆசிரியம்” சஞ்சிகை வெளியீட்டுவிழா கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

மாணவர் அமைப்புத் தலைவர் திரு. ஏ. சி. யோர்ஜ் தலைமையில் நடைபெற்ற வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு தமிழீழக் கல்வி மேம்பாட்டு பேரவைத் தலைவர் அருட்திரு பிரான்சிஸ் யோசவ் அடிகளார் தொடர்ந்து உரையாற்றும்போது:

தேசிய நலன்களை ஆசிரியர்கள் பாதுகாக்கவேண்டும், பேணவேண்டும். தேசிய உணர்வுகளை மாணவர்களுக்கு ஊட்டவேண்டும். மண்ணை நேசிக்கும் மனப் [illegible] வளர்க்கவேண்டும்.

[illegible] ணங்களை ஆக்கங்களாக படைப்பதுடன் மாணவர் மத்தியில் ஆக்கசிந்தனையை ஏற்படுத்தி மாணவர்களது ஆக்கங்களை வெளிவரச் செய்யவேண்டும். எண்ணங்களை நல்லனவாக எழுத்தில் வடிக்க வேண்டும் என்று கூறினார்.

விழாவில் கலந்துகொண்டு நூல்விமர்சன உரையாற்றிய கலாநிதி சபா. ஜெயராசா உரையாற்றும்போது கூறியதாவது:

ஆசிரியர்களை வேலைசெய்கின்ற சமூகமும் மாணவரும் முன்னேற முடியாது. ஆசிரியர்களை மதிப்பதன் மூலம் மாணவர்கள் தமது கல்வி முன்னேற்றத்தை முன்னெடுக்க வேண்டும்.

ஆசிரியர்களும் தமது பங்களிப்பை உணர்வுபூர்வமாக வழங்கவேண்டும்

அண்மைக்காலக் கல்வி நிலையில் தாய்மொழி, கணிதம் ஆகிய பாடத்துறைகளில் காணப்படுகின்ற வீழ்ச்சி நிலை கவலை அளிக்கின்றது. இந்த நிலை திட்டமிட்ட முறையில் மாற்றியமைக்கப் படவேண்டும் எனக் கூறினார்.

வலயம் 2 கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி, வலயம் 1 கல்விப்பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் உட்பட பலர் உரையாற்றினர்.

‘ஆசிரியம்’ சஞ்சிகை முதல் [illegible] பேசி போட்டோ உரிமையாளர் பெற்றுக் கொண்டார்.

(க-11)


கொக்குவில்
வளர்மதி முன்னேற்றக்கழக
சிறுவர் பாடசாலையின்
## விளையாட்டுப் போட்டி

காலம்: 27-05-1995 இன்று
நேரம்: பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பம்
இடம்: கழக விளையாட்டு மைதானம்
தலைவர்: திரு. வை. சிவனேசன்

பிரதம விருந்தினர்:
திரு. க. இராமநாதன்
[தலைவர், கொக்குவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலனசபை]

சிறப்பு விருந்தினர்கள்:
திரு. வை. செல்வம்
திரு. கு. அம்பிகைபாகன்
திரு. பி. ரவிதரன்

சிறப்புரைகள்:
திருமதி சோ. ஈஸ்வரபவானி
செல்வி பொ. லதா

வளர்மதி முன்னேற்றக்கழகம்
சம்பியன் லேன்,
கொக்குவில்.

[சி/1273]



## ஆசிரியர்கள் தேவை

மன்னார், வவுனியா மாவட்டப் பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், சித்திரம், சங்கீதம் நடனம் ஆகிய பாடங்களைக் கற்பிக்க ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர்.

த. பொ. தேர்வு, க. பொ. த. [உ/த] பெறுபேறுகளுடன் ஏனைய கல்வித் தகைமைகளையும் குறிப்பிட்டு விண்ணப்பங்களை 31 — 05 — 95க்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

முகவரி:

**தமிழீழக் கல்விக் கழகம்**
நடுவப்பணியகம்,
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

[சி-1272]



## மலரகம்

சகல விதமான
கொண்டாட்டங்களுக்குமேற்ற பொருள்களுக்கு
✶ பீங்கான்
✶ ரம்லர்
✶ ஐஸ்கிறீம் கப்
✶ கிடாரங்கள் உட்பட

சகல சமையல் பாத்திரங்களுக்கும் நாட வேண்டிய இடம்

172, பிரதான வீதி, - மலரகம் -
யாழ்ப்பாணம்

வெள்ளை மாளிகை அந்தியகால சேவை அருகில்.

(36817)



## நினைவுபடுத்துகிறது

நாளை காலை 9 மணிக்கு தனது வருடாந்தப் பொதுக் கூட்டம் வித்தியாலய மண்டபத்தில் நிகழ்வதை....

பழைய மாணவர் சங்கம்
சேர். வை. துரைசுவாமி ம. ம வி
வேலணை

(36818)


## 6-ம் மாத நினைவலைகள்

மலர்வு: 27 — 05 — 1989



உதிர்வு: 26 — 11 — 1994

### செல்வி மயில்வாகனம் கீர்த்திகா

மாதங்கள் ஆறு நகர மறுத்தன......
மல்லிகை உன் நினைவுகளால்.....

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, தம்பி, தாத்தா,
அம்மம்மா, மாமாமார், சித்திமார்
மற்றும் உறவினர்கள்

45/33, முருகமூர்த்தி வீதி,
வண். வடமேற்கு,
யாழ்ப்பாணம்

(36816)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில்

# அகதி முகாம்களின் குடிசைகளை திருத்த ரூ. 4½ லட்சம் நிதியுதவி

வலி. மேற்கு, மே 27

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 1,752 குடிசைகளைத் திருத்தியமைப்பதற்கு 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 47 இடம்பெயர்ந்த முகாம்களில் 1,752 குடிசைகள் மானிப்பாய், நவாலி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த 1,752 குடிசைகளிலும் சுமார் 1,755 குடும்பங்கள். தீவகம், தெல்லிப்பளை, மாதகல், இளவாலை, காங்கேசன்துறை ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்து தங்கியிருக்கின்றன.

இந்த முகாம்களின் பராமரிப்பு திருத்த வேலைகளுக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திரு. து. வைத்திலிங்கம் 36 லட்சம் ரூபா நிதியை யாழ். செயலக திட்டப்பணிப்பாளரிடம் கோரியிருந்தார். ஆனால் தற்போது திட்டப் பணிப்பாளரினால் 4லட்சத்து 50 ஆயிரம் ரூபா மட்டும் வழங்கப்பட்டுள்ளது.

(ஒ-க-175)

## கொள்ளை லாபமடித்தால் ஈரானில் மரணதண்டனை!

ஈரானிய நாடாளுமன்றம், கொள்ளை லாபம் ஈட்டுவோருக்கு மரணதண்டனை விதிப்பது சம்பந்தமான சட்ட மூலம் ஒன்றை விவாதிக்கிறது.

நாட்டில் பணவீக்க வீதம் அதிகரித்துச் செல்வதற்கு இத்தகையவர்களே காரணம் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

விவாதத்தில் கலந்துகொண்ட அங்கத்தவர்கள் எவருமே, கொள்ளை லாபம் ஈட்டுவோருக்கு மரண தண்டனை விதிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை

தற்போது ஈரானிய றியாலின் பெறுமதி 50 சத வீதமளவில் குறைந்துள்ளது.

இதன் காரணமாக பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. இங்கு வருடாந்தப் பணவீக்கம் 40 சதவீதமாக இருக்கிறது

சில அடிப்படை உணவுப் பொருள்களின் விலை மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. (ஒ-5)

## பட்டப்பகலில் ஓடு பிரித்து இரு தங்க அட்டியல் திருட்டு

### வட்டுக்கோட்டையில் சம்பவம்

வலிமேற்கு, மே 27

வட்டுக்கோட்டையில் பட்டப்பகலில் இரண்டு தங்க அட்டியல்கள் களவாடப்பட்டுள்ளன.

சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான அந்த இரண்டு தங்க அட்டியல்களும் கடந்த திங்கட்கிழமை நண்பகல் ஓடு பிரித்து வீட்டுக்குள் இறங்கிய திருடர்களினால் அபகரிக்கப்பட்டன.

அந்த வீட்டுக்காரர்கள் உறவினர் ஒருவரின் திருமணத்துக்குச் சென்றதை அறிந்து பட்டப்பகலில் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக சங்கானை காவல் பணிமனையில் புகார் செய்யப்பட்டுள்ளது.

காவல்துறையினர் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

[ஒ-175]

## பாடநூல், காகிதாதிகள் உற்பத்திச் செலவு உயரும்

### மரக்கூழின் விலை அதிகரிப்பு

சிங்கப்பூர், மே27

காகிதஉற்பத்திக்குத் தேவையான மரக்கூழின் (Bulb) விலை அதிகரித்துச் செல்வதனால், சிங்கப்பூரில் பாடசாலை புத்தகங்கள், நாவல்கள் மற்றும் காகிதாதிகளின் விலைகள் விரைவில் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அண்மைக்காலங்களில் தொடர்ந்து அதிகரித்து வரும் இந்த விலை ஏற்றத்தை நோக்குகையில் மரக்கூழின் விலை தொன்ஒன்றுக்கு 1200அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன என்று சிங்கப்பூரிலிருந்து வெளிவரும் ஆங்கில தினசரியான 'ஸ்ரேற்ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

1993இல் மரக்கூழ் தொன் ஒன்றுக்கு 350அமெரிக்க டொலராக இருந்தது.

தற்போது தொன் 915 அமெரிக்க டொலர்களாக விற்கப்படுகிறது.

உலகளாவிய ரீதியில் மரக்கூழிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையும்—

சர்வதேச பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மீட்சி மாற்றங்களும்—

ஆசியசந்தை உருவாக்கமுமே— இவ்வாறு. மரக்கூழின் விலையினை அதிகரிக்கச் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த12 மாதங்களாக இப்பகுதிகளில் 50முதல் 100 சதவீதத்தால் காகிதத்தின் விலை அதிகரித்து வருகிறது.

[இ-5]

## புலனாய்வு பணியகத்துக்கு புதிய தலைவர்

கொழும்பு, மே 27

தேசிய புலனாய்வுப் பணியகத்தின் தலைவராக, புன்யா டி. சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் புலனாய்வுத் துறையின் சிரேஷ்ட அதிகாரியாக இதுவரை கடமையாற்றி இருந்தார்.

தேசிய புலனாய்வுப் பணியகத்தின் தலைவராக இருந்த பிரதி பொலீஸ் மா அதிபர் செர்னி விஜேசூரிய தமது பதவியில் இருந்து ஓய்வு பெற்றதை அடுத்தே புன்யா டி. சில்வா புதிய தலைவராக நியமிக்கப்பட்டார். [ஐ-5]

## மாநகர சபை எழுதுநர்களுக்கு பதவி உயர்வு

யாழ்ப்பாணம், மே 27

யாழ். மாநகரசபையில் கடமையாற்றும் நான்கு எழுதுநர்களுக்கு வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளரால் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் பொது எழுதுநர் சேவை வகுப்பு இரண்டின் 'ஏ' பிரிவிற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளார்கள். திரு வாளர்கள் தர்மகுலசிங்கம், பொ. இராமநாதன், இ. தங்கராசா, எஸ். கந்தசாமி ஆகியோரே அந்த நால்வரும் ஆவர்.

இவர்களுக்கான பதவி உயர்வு நியமனக்கடிதங்கள் வடகிழக்கு உள்ளூராட்சி ஆணையாளரால் யாழ் மாநகரசபைக்கு அனுப்பவைக்கப் பட்டுள்ளன. (ஒ-4)

அரசாங்கத்துக்கு எதிராக

# நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வர ஆராய்கிறது ஐ. தே. க

## சொக்ஸி, ஜெயமகா இருவரும் முனைப்புடன் செயலில்

கொழும்பு, மே 27

அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வர எதிர்கட்சியான யூ. என். பி. ஆராய்ந்து வருகிறது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தயாரிக்கும் வேலைகளை கே. என். சொக்ஸி, டி. எச். என். ஜெயமகா ஆகிய இருவரும் முனைப்புடன் செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாக்குறுதிகளை நிறைவேற்றாமை, வடபகுதிப் பிரச்சினையைச் சிக்கலாக்கி புலிகள் அமைப்பிற்கு முக்கியத்துவமளித்தது உலகவங்கியின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு நாட்டின் பொருளாதாரத்தைப் பாதாளத்திற்கு இட்டுச் சென்றது, நாட்டின் நிர்வாகத்தில் அராஜகம் நிலவுவது ஆகிய விடயங்களை அடிப்படையாக வைத்து இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை யூ என். பி. தயாரிப்பதாக "யுக்திய" சிங்கள வார இதழ் தெரிவிக்கிறது (ஒ-2-10)

## அனர்த்தம்ஏற்படும் வேளை செயற்படுவதற்கு குழுக்கள்!

### பிரதேச செயலர் பிரிவு மட்டத்தில்

யாழ்ப்பாணம், மே. 27

யாழ் மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் அனர்த்தங்கள் ஏற்படும் போது செயற்படுவதற்காக பிரதேச செயலர் பிரிவு மட்டத்தில் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை பிரதேச செயலர்கள் மேற்கொண்டுள்ளனர்.

போர்க்கால சூழ்நிலையில் அனர்த்தங்கள் ஏற்படும் போது காயப்பட்ட மக்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லல் இடம்பெயர்ந்து பொது இடங்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு உணவு வழங்குதல், சுகாதார இருப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகிய நடவடிக்கைகளை இந்தக் குழுக்கள் மேற்கொள்ளவுள்ளன

பிரதேச செயலர் பிரிவு மட்டக் குழுக்களில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், ப.நோ.கூ.ச. பிரதிநிதிகள். சுகாதாரப்பகுதியினர், பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இடம்பெறவுள்ளனா. (ஒ-175)

ஷெல், பீரங்கித் தாக்குதல்களினால் ஏற்பட்ட

# செல்வச்சந்நிதி ஆலய சேதத்துக்கு நஷ்டஈடு வழங்கக் கோரிக்கை

## இந்து சமயப் பேரவை கண்டனமும் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 27

கடந்த வாரம் பலாலி இராணுவ முகாமில் இருந்து தொண்டமனாறு பகுதியை நோக்கி ஏவப்பட்ட ஷெல்களினாலும், அங்கிருந்து மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதல்களினாலும் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் கட்டடங்கள் சேதமடைந்ததுடன் ஆலய நித்திய பூஜைகளைக் கூட செய்ய இயலாத நிலை தோன்றியுள்ளது.

அரச படையினரின் இத்தகைய கண்மூடித்தனமான தாக்குதல்களை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி, அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கக் கோரும் மகஜர் ஒன்றை யாழ் இந்து சமயப்பேரவை யாழ் அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளது.

அந்த மகஜரின் விவரம் வருமாறு;

பலாலி இராணுவ முகாமில் இருந்து கடந்த 17ஆம் திகதி நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களினாலும், பீரங்கித் தாக்குதல்களினாலும் மேற்படி ஆலயக்கட்டடம், அன்னதானமடங்கள், குருமார் இல்லங்கள் கடுமையாகச் சேதத்துக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக ஆலயப்பூசைகள் நிறுத்தப் பட்டுள்ளதாகவும், குருமார்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் இவ்வாலய நிர்வாகத்திற்குப் பொறுப்பான சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகிகள் அறிவித்துள்ளனர்.

தொடர்ந்தும் ஷெல்தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாம் எனவும் அவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்துடன் உடனடியாகத் தொடர்புகொண்டு இந்த அநியாயமான ஷெல் தாக்குதல்களையும், பீரங்கித் தாக்குதல்களையும் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வரலாற்றுப் பெருமைமிக்க இந்து ஆலயத்தின்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இத்தாக்குதல்கள் காரணமாகப் பூசைகள் நிறுத்தப் பட்டுள்ளதுடன் மடங்களில் தங்கி முருகனை வழிபட்டு தீராத தங்கள் நோய்களுக்கு நிவாரணம் தேடும் நூற்றுக்கணக்கான நோயாளர்களும் இடம்பெயர்ந்து நிர்க்கதிக்குள்ளாகியிருக்கின்றனர் என்பதையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றோம்.

எனவே ஆலயச் சூழலில் ஷெல் தாக்குதல்களோ, பீரங்கித் தாக்குதல்களோ மேலும் நிகழாவண்ணம் உறுதி செய்து வழமையான பூசைகள் நடைபெறவும், மடங்களிலும், ஆலயச் சுற்றாடலிலும் குடியிருந்தோர், மீளக் குடியேறவும் ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறும், ஆலயத்திற்கு ஏற்பட்ட சேதங்களுக்கு உரிய நஷ்டஈட்டை அரசாங்கத்திடமிருந்து பெற்றுத் தருமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-5]

## ஹெரோயின் கடத்திய இராணுவ மேஜர் கைது!

கொழும்பு, மே 27

நீண்டகாலமாக கடத்தல் தொழிலில் ஈடுபட்டு வந்த இராணுவ மேஜர் ஒருவர், வாகனம் ஒன்றில் ஹெரோயின் போதைப் பொருளைக் கடத்திச் செல்ல முற்பட்டபோது பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த இராணுவ மேஜரும், வர்த்தகர் ஒருவரும் வாகனம் ஒன்றில் ஹெரோயினை கடத்திச் சென்றனர்.

இது பற்றி பொலீஸாருக்கு தகவல் கிடைத்ததை அடுத்து. களுத்துறையில் வைத்து இவர்கள் பிரயாணம் செய்த வாகனம் களுத்துறை தெற்கு பொலீஸாரினால் மடக்கப்பட்டது.

வாகனத்தைச் சோதனையிட்ட பொலீஸார் 15 தீப் பெட்டிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த, சுமார் 150 மில்லிக் கிராம் நிறையுள்ள ஹெரோயினைக் கைப்பற்றினர்.

இந்த இராணுவ மேஜர் இன்னும் இரண்டு வருடங்களில் தமது வேலையில் இருந்து ஓய்வு பெறவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ 5)

வீடமைப்பு மான்யத்துக்கு

## தெரிவான 9 பேருக்கும் ரூ. 3 ஆயிரம் கிடைக்கும்

வலி மேற்கு, மே 27

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் வீடமைப்பு மான்யத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட ஒன்பது பேருக்கும் முதலாம்கட்ட மான்யமாக 3 ஆயிரம் ரூபா காசோலையாக வழங்கப்படவுள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் இந்த ஆண்டுக்கான வீடமைப்பு மான்யம் முதலாம் கட்டப் பணத்துக்கான காசோலை எதிர்வரும் திங்கட்கிழமை பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசாவினால் வழங்கப்படவுள்ளது.

இந்த வீடமைப்பு மான்யத்துக்கு மூளாய் கிராம உத்தியோகத்தர் பிரிவில் இருந்து நான்கு பேரும், தொல்புரம் மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் இருந்து மூன்று பேரும், அராலி மேற்கு, வட்டுக்கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் இருந்து ஒவ்வொருவரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ஒ-175)

### ஊரெழுவில் தீ சுமந்தோர் நாடகம்

யாழ்ப்பாணம், மே. 27

ஊரெழு சைவாலய முன்னேற்றக் கழக 10 ஆவது நிறைவுப் பணிக்காக யாழ். பல்கலைக்கழகசமூகவிஞ்ஞான மன்றத்தின் அனுசரணையுடன் சி. ஜெயசங்கரின் நெறியாள்கையில் இயக்கப் ... கம் இன்று மாலை 6 மணிக்கு ... இல் நடைபெறும். (ஒ-5)

# அழியும் பாரம்பரிய கலைகளை நாம் பேணிக்காக்க வேண்டும்

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் உரை

வலி. மேற்கு, மே 27

"அழியும் பாரம்பரியக் கலைகளை நாம் பேணிக்காக்க வேண்டும். அவற்றை அரங்கேற்றும் கலை விழாக்கள் இதற்குப் பெரிதும் உதவ முடியும்."

சங்கானை கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையினரின் கலை விழாவின் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

கலை விழா சங்கானை கலாசார மண்டபத்தில் கடந்த 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் பேரவையின் தலைவரும் வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளருமான திரு. கா. சந்திரராசா தலைமையில் நடைபெற்றது.

கலைவிழாவை சங்கானை உப அலுவக பொறுப்பதிகாரி க. திரவியம், சுழிபுரம் பிரதேச சபை செயலாளர் திரு. கா. சற்குணாநந்தன் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

திரு. ப. விக்கினேஸ்வரன் தொடர்ந்து உரையாற்றுகையில்; இன்றைய காலத்துக்கு தேவையான கலைகளை வளர்ப்பதற்கும் மக்கள் கலையில் நாட்டத்தை ஏற்படுத்துவதற்கும் இப்பிரதேச கலாசாரப் பேரவையினர் முன்நின்று உழைத்து வருகின்றனர். அழிந்துபோய்க் கொண்டிருக்கும் பாரம்பரிய கலைகளான காவடி நடனம், வடமோடி நாட்டுக் கூத்து ஆகியன இன்று இந்த அரங்கில் நடைபெற இருக்கின்றன. இப்படியான நிகழ்வுகள் நடைபெறாமல் இருந்தால் எமது பாரம்பரிய கலைகள் அழிந்து போய்விடும். இதனை தடுத்து நிறுத்துவதற்கு இந்த நிகழ்வு முக்கிய பங்கு வகிக்கும் என்றார்.

கலை விழாவில் யாழ். கல்வி வலயம் – 2இன் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சங்கீத பூஷணம் திரு சு. கணபதிப் பிள்ளையின் இசைக் கச்சேரியும் அண்ணாவியார் திரு. அ. சுப்பிரமணியம் அவர்களின் காவடி நடனமும், சங்கானை சலேசியார் இடம் பெயர்ந்தோர் முகாமின் கோலாட்டமும், வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திக் குழுவினரின் பாரதத்தின ... வடமோடி நாட்டுக்கூத்தும் இடம் பெற்றன.

(க-175)

## செய்திக் கொத்து

### நிவாரணம் வழங்க நடவடிக்கை

வலிகாமம் மேற்கு, மே 27

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர்களின் சுமார் 1,170 குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்குவதற்கு பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். (க-175)

### சிகிச்சை நிலையங்களுக்கு தராசுகள்

தென்மராட்சி, மே 27

பிரசவத் தாய்மார்களை நிறுப்பதற்கென பத்துத் தராசுகள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்தத் தராசுகள் இப்பிரிவில் உள்ள தாய் சேய் சிகிச்சை நிலையங்களுக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (க-117)

### மாணவருக்கு சத்துணவு

யாழ்ப்பாணம், மே 27

பருத்தித்துறை பிரதேச சபை அங்கு இயங்கிவரும் சத்துணவுக் கூடத்தின் ஊடாக வடமராட்சி வடக்கு பகுதிகளில் இயங்கிவரும் சுமார் இருபது பாலர் பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

வேறு எந்த நிறுவனத்தினதும் உதவி இன்றி இயங்கி வரும் இப்பாடசாலைகளுக்கு கடந்த மாதம் முதல் சத்துணவு வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ-15)

### நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி, மே 27

தென்மராட்சி பிரதேசசபை அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கென பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடைநிதியில் ரூபா இரண்டு இலட்சத்து 45ஆயிரம் தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதியில் நூலக தளபாட கொள்வனவுக்கு ரூபா ஒரு லட்சமும், ஆயுர்வேத வைத்தியசாலை தளபாட கொள்வனவுக்கு 60ஆயிரமும், நாய் பிடிவண்டி கொள்வனவுக்கு 35 ஆயிரம் கைதடி தாய்சேய் சிகிச்சை நிலையம் அமைப்பதற்கும், வரணி பொதுச் சந்தை திருத்தியமைப்பதற்கும் தலா25 ஆயிரம் வீதமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

### கட்டுப்பாட்டு விலையில் பொருள்கள்

தென்மராட்சி, மே 27

பளைநகரில் உள்ள அரச உள்ளூராட்சி கூட்டுறவுத் துறை ஊழியர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழக மக்கள் கடையில் பங்கீட்டு அடிப்படையில் அத்தியாவசிய பொருள்கள் கட்டுப்பாட்டு விலையில் வழங்கப்படுகிறது.

### பிரிவுபசாரம்

தென்மராட்சி, மே 27

பளை மத்திய கல்லூரியின் பிரதி அதிபராக கடமையாற்றி வரணி இடைக்குறிச்சி வித்தியாலய அதிபராக பதவி உயர்வு பெற்றுச் சென்ற க. சிவானந்தனுக்கும், இக்கல்லூரியிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற பத்து ஆசிரியர்களுக்கும் கல்லூரி ஆசிரியர் கழகமும், மாணவர் மன்றமும் இணைந்து நடத்திய பிரிவுபசார விழா கடந்த 15ஆம் திகதி கல்லூரி மண்டபத்தில் அதிபர் பொ. புண்ணியசீலன் தலைமையில் நடைபெற்றது.

இவ் விழாவில் ஆசிரியர் சார்பில் த. முருகதாஸ், ச. தில்லைநாயகம் ஆகியோரும் மாணவர்கள் சார்பில் ச. தவச்செல்வன், செல்வி டெய்சிகிரிசாந்தி ஆகியோரும் உரையாற்றினர்.

(க-117)

### கௌரவிப்பு

கொழும்புத்துறை, மே. 27

சாவகச்சேரி ஸ்ரீகந்தசுவாமி கோயில் வருடாந்த அலங்காரத்திருவிழா கடந்த 15 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்ற போது திருவிழாவைத்திறம்பட நடத்தி வைத்த வேலணை திரு எஸ். மகேஸ்வரக்குருக்கள் சைவப் பெரியார் திரு. க. இராசரெத்தினத்தால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (க-30)

### சமுர்த்தி திட்டக்குழுக்கள்

தென்மராட்சி, மே 27

பளைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராம அலுவலர் பகுதிகளில் சமுர்த்தி திட்டக் குழுக்கள் கிராமம் ரீதியாக தெரிவுசெய்யப்பட்டு வருகின்றன.

இக்குழுக்களில் 18க்கும் 35க்கும் இடைப்பட்ட வயதினரே கூடுதலாக தெரிவு செய்யப்படுகின்றனர்.

(க-117)

### பரிசில் வழங்கும் வைபவம்

வலி மேற்கு, மே 27

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக நடத்தப்பட்ட வதிவிட வேளாண்மைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ஜூன் மாதம் 5ஆம் திகதி பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

ஜூன் மாதம் 5 ஆம் திகதி சித்தன்கேணி கணேச வித்தியாசாலைமண்டபத்தில்நடைபெறவுள்ள சூழல்பாதுகாப்பு தின விழாவில் வைத்து பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

(க-175)

### எள்ளு அறுவடை

சுழிபுரம், மே. 27

சுழிபுரம், பொன்னாலைப் பகுதியில் எள்ளு அறுவடை ஆரம்பமாகியுள்ளது ஒரு கிலோ எள்ளு 60 முதல் 65 ரூபா வரை விற்பனையாகின்றது. (ச-38)

### விவசாயக்குழு தீர்மானம

வலி மேற்கு, மே. 27

நெல்லுக்கு பயிர் காப்புறுதி செய்யப்படுவது போல மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு. வாழை ஆகிய பயிர்களுக்கும் காப்புறுதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்

இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்று வலிகாமம் மேற்கு பிரதேச விவசாயக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

(க-175)

### சின்னம் சூட்டும் வைபவம்

வலி தெற்கு, மே. 27

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

யாழ். போதனா வைத்திய சாலையைச் சேர்ந்த வைத்திய கலாநிதி திருமதி செல்வகமலம் தெய்வேந்திரன் மாணவிகளுக்கான சின்னங்களைச் சூட்டினார்.

(ஒ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அதிவேகமான தையல் வேலைகளுக்கு உகந்த 1/3 H.P. மோட்டாருடன் இணைந்த இரண்டு தையல் மெஷின்கள் விற்பனைக்கு உண்டு. மொடல், 491 அல்லது 591, ராம்சன்ஸ் மே/பா Dr. S. இராசையா, சுதுமலை வடக்கு, மானிப்பாய். [8551]

சுத்த, அழகிய பூச்சி நீக்கப்பட்ட 2 மாதம் நிரம்பிய அல்சேசன் நாய் குட்டிகளும், 5 மாதம் நிரம்பிய கறுப்பு நிற சுத்தமான அல்சேசியன் நாய்க் குட்டியும் விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கு கழிவுண்டு. தொடர்பு: டாக்டர் செல்லத்துரை நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (8560)

விறகு காலைக்குத் தேவையான பெரிய தராசு படிகளுடன், கடை விறாக்கை, இரும்புக் கட்டில் என்பன விற்பனைக்குண்டு விவரங்களுக்கு: க. குலம், இல 9, மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (36810)

அவுட் ... நாட்டு ... லிங் கோழி முட்டைகள் மற்றும் இறைச்சி வானழக் குட்டிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர். [36801]

ஒன்றரை மாத வெள்ளை பொமரேனியன் ஆண், பெண் நாய்க்குட்டிகள் [பூச்சி நீக்கப்பட்டவை] விற்பனைக்கு உண்டு. தொடர்பு: றோசாதி தோட்டம், தலங்காவல் பிள்ளையார் கோயில் அருகில், திருநெல்வேலி கிழக்கு. [36771]

24 H. P. இங்கிலன்ட் பேறற் டீசல் எஞ்சின் விற்பனைக்கு உண்டு தொடர்பு: சேகர் குளிர் ஊற்று, இல. 273' காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (36768)

### காணி விற்பனைக்கு

நீர்வேலி ... பிள்ளையார் கோயிலுக்கு அருகில் எட்டுப்பரப்பு பலம் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: க. வருணையா, கிராமிய வங்கி, நீர்வேலி. [36779]

### [illegible]

சாவகச்சேரியில GCE (O/L) 1995 — கணிதம், விஞ்ஞானம் பயிற்றப்பட்ட ஆசிரியரால் வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். தொடர்பு கொள்ளவும். பே/பா உதயன், வி. இல. 795, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [36788]

### மண்ணெய் விநியோகம

தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்பட இருந்த மண்ணெண்ணெய் விநியோகம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. மாணவர் அவை, தொழில் நுட்பக் கல்லூரி. [36793]

### மணப்பெண் தேவை

இந்து, மூல நட்சத்திரம், செவ்வாய்க்குற்றமற்ற, 30 வயது, B. Sc. பட்டதாரி, தற்பொழுது கனடாவில் குடியுரிமை பெற்று தொழில்புரியும் மணமகனுக்கு, அழகான படித்த நற்குணமுள்ள மணப்பெண்ணை பெற்றோர் தேடுகின்றனர். சாதக குறிப்பு மற்றும் முழுவிவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: இல. 794, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [36761]

### பயிற்சி வினாத்தாள்கள்

ஆண்டு 3, 4, 5, 6, 7, 8, 9, 10. O/L வகுப்புகளுக்காக ஒவ்வொரு மாதமும் பயிற்சி வினாத்தாள்கள் [விடைகளுடன்] எம்மால் வெளியிடப்படுகின்றன. மே மாதத்திற்கான பயிற்சி வினாத்தாள்கள் 27-5-95 சனி முதல் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [8557]

### ஆண்டு 5 புலமைப்பரிசில

அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட புதிய பாடத்திட்ட மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். தொகையாகப் பெற விரும்புவர்களுக்கு 25% கழிவுண்டு. Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [8558]

ஆண்டு 5 புலமைப்பரிசில் 95 பரீட்சைக்காக புதிய பாடத்திட்டப்படி பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்) ஒவ்வொரு மாதத்தின் 2ஆவது 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன. அடுத்த வெளியீடு: 28-5-95 பயிற்சி வினாத்தாள்களையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். Bond, 58A, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். [8559]

### VENUS ANTENNA

To View Rupavahini, Madras Programmes, Fixing Venus Antenna Repairing Antennas, Radios, T.V-Decks, Clocks and Watches Venus Dilka Watch and Radio Works, 284: Stanley Road [Ariyakulam Junction] Jaffna. Branch, Kandy Road, Chavakachcheri. [C/1351]

---

## 23 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 09 — 11 — 1923

மறைவு: 10 — 06 — 1972

அமரர்

## தம்பாபிள்ளை நெல்லிநாதன்

[பிரதம நிர்வாக உத்தியோகஸ்தர், பொலீஸ் திலாகா]

திதி' 27 — 05 — 1995

அன்னை புவனேஸ்வரியும் மக்கள் நாமும்
அப்பா உம் அன்பதனால் தளிர்த்தே வந்தோம்
கன்னலினும் கனிந்த சுவைச் சொல்லால் எம்மைக்
காத்தளித்த பெரியோரே! நெல்லை நாதா!
இன்னலின அறியாதே பறவை குஞ்சை
இருஞ்சிறகுகள் அணைப்பது போல் -
அணைத்துக் காத்தீர்
காலங்கள் பல கடந்து சென்றாலும் உங்கள்
அன்பு உள்ளம் எம் நெஞ்சை அகலாது அப்பா
உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

அன்பு மனைவி மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
மைத்துனி- செல்வி நதலேஸ்வரி கந்தையா

"தாய் அகம்"
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. (36811)

---

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

(27-05-95)



**M. R. LUCKSHUNAN**

எமக்கல் இராஜ்நகார்-மேரி அனற் தம்பதிகளின் செல்வப் புதல்வன்

### மை. இரா. லக்ஷனன்

அவர்கள் இன்று தனது முதலாவது பிறந்தநினத்தை தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார் இவரை அப்பா, அம்மா பருத்தித்துறையைச் சேர்ந்த அம்மப்பா, அம்மம்மா, மாமன்மார், சித்திமார், பாலாவூரைச் சேர்ந்த அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பா, அத்தைமார், அத்தான்மார், மச்சி, அக்காமார், அண்ணாமார் மற்றும் உற்றார் உறவினர் அனைவரும் பலகலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று பெரு வாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றனர்.

"அனற் அகம்",
கடற்கரைவீதி,
பருத்தித்துறை. (36791)

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட் யாழ்

### A/L கலை பிரிவு 97

புதிய பிரிவு ஆரம்பமாகிவிட்டன
காலை 8 மணி

பொருளியல்
திரு. லோகசிங்கம்
தமிழ்
திரு. குழந்தை
புவியியல்
திரு. குணராசா
இந்துசமயம் / நாகரிகம்
திரு. காரை சுந்தரம்பிள்ளை
அளவையியல்
திரு. விக்கி

★ மற்றைய பாடங்களும் தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களினால் போதிக்கப்படுகிறது. [சி/1428]

---

## மருதங்கேணி ஆசிரியருக்கு கஷ்டப்படி நிறுத்த உத்தரவு

வடமராட்சி, மே, 27
மருதங்கேணி கல்விக் கோட்ட பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த கஷ்டப் பிரதேசப்படி 15 வீதத்தை நிறுத்தும்படி வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சு பணித்துள்ளது.

அத்தோடு கடந்த மாதம் வழங்கப்பட்ட கஷ்டப் பிரதேசப்படி 15 வீதத்தையும் மீளப் பெறும் படி அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதனால் போக்குவரத்துக் கஷ்டம் உட்பட பலவித கஷ்டங்களை எதிர் நோக்கியுள்ள இப் பகுதி ஆசிரியர்கள் பெரும் அதிருப்தி அடைந்துள்ளார்கள் [உ-173]

## மோசமான பிரதான வீதி

வடமராட்சி கிழக்கில் பருத்தித்துறை - மருதங்கேணி பிரதான வீதி மிக மோசமான குண்டும் குழியுமாக காணப்படுகிறது.

இப்பாதையால் போக்குவரத்துச் செய்வது மிகவும் கடினமாகவுள்ளது. [உ-173]

## கற்கைநெறி பூர்த்தி

யாழ்ப்பாணம், மே 27
யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட முகாமைத்துவம் ஓர் அடிப்படைக் கற்கைநெறி தொகுதி 1இற்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தொகுதி 2இற்கான விரிவுரைகள் எதிர்வரும் யூன் மாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகும்.

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் நடைபெறும், வாகனப் பொறியியல் அடிப்படைக் கற்கைநெறி தொகுதி 1இற்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 30மணிக்கு பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறும். தொகுதி 2இற்கான விரிவுரைகள் எதிர்வரும் ஜூன் மாதம் 3ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும். (ஐ-5)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### அறிவித்தல்

**விஞ்ஞான பீடம்**

முதலாம் அரையாண்டு,
3ஆம் ஆண்டுக்கான
பரீட்சை
நேரசூசிகை மாற்றம்

06-06-95 இல் நடைபெறவிருந்த கணனி விஞ்ஞான பாட அலகுகள் [CSG 31, CSG 32]

07-06-95 இல் ஏற்கனவே தீர்மானித்த நேரங்களில் நடைபெறும்.

– பதிவாளர்.
1995-05-25 [சி-1269]

---

அளவெட்டி
## கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் வருட மஹோற்சவ காலக் கடைகள்

மேற்படி கடைகள் எதிர்வரும் 01 - 06 - 1995 வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு ஆலய முன்றிலில் வழங்கப்படும்.

- தர்மகர்த்தாக்கள் சபை.
[8411]

---

## புதிய பெரடெனியா இன்ஸ்ரிரியூட்

கே. கே. எஸ். றோட், கொக்குவில்.

### A/L 97 பிரிவுக்கான

| | | |
|---|---|---|
| தூயகணிதம் | — | சண்முகேஸ்வரன் |
| பிரயோக கணிதம் | — | E F R. ஜெயக்குமார் |
| பௌதீகவியல் | — | ஜெயசீலன் |
| இரசாயனவியல் | — | இராசநாத் / A. K. மூர்த்தி |
| விலங்கியல் | — | செல்வநாயகம் |
| தாவரவியல் | — | யோகேஸ்வரன் |

95/96 மீட்டல் வகுப்பு நடைபெறுகின்றது. (சி-1417)

---

## பதினோராம ஆண்டு - பதின்மூன்றாம ஆண்டு நினைவஞ்சலி



அமரர்கள்



கந்தப்பு ஸ்ரீபன்
தேவராசா (தேவா)
மலர்வு: 22 — 08 — 1946
உதிர்வு: 27 — 05 — 1984

கந்தப்பு ஸ்ரீபன்
ஞானராசா (ஞானி)
மலர்வு: 09 — 08 — 1955
உதிர்வு: 29 — 05 — 1982

என் இரு கண்ணின் விழிகளே
உங்களை மோட்ச கரையில் சந்திப்பேன் என்னும் விசுவாசத்துடன்
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.

– உங்கள் அம்மா.

ஸ்ரேசன் லேன்,
சாவகச்சேரி [36976]

---

## 8-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 02 — 04 — 1930

மறைவு: 27 — 05 — 1987

அமரர் அருளம்பலம் முத்துராஜா
(முன்னாள் உப தபால் அதிபர், தொண்டைமானாறு)

திதி: 29 – 05 – 1995

நாலிரண்டு ஆண்டு சென்றாலும் நீங்கள் எம்மை விட்டுச் சென்றது இக்கணப்பொழுது போல் தான் இன்றும் உங்கள் உருவம் என் கண்முன்னே நிழலாகத் தெரிகின்றது.

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய சந்நிதியானைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவியும், பிள்ளைகளும்.

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு. [36786]

---

## 8-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 02 — 08 — 1966

இறப்பு: 27 — 05 — 1987

அழகையா பிறேமகுலசிங்கம்
[பிறை]

திதி: 29 – 05 – 1995

அன்பெனும் பாசத்தில்
அணையா ஒளி தீபமே
எட்டு ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்மை
விட்டு நீங்கவில்லை.

உங்கள் பிரிவால் வாடும்;
அழகையா குடும்பத்தினர்.

கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை. [36797]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## சதம் சதமாக தேடும் பரிதாபம்!

போரைத் தீவிரமாக்குவதற்கு அரசாங்கம் முடிவு செய்துவிட்டது. அதனால் இந்த வருடத்துக்கு ஒதுக்கப்பட்ட பாதுகாப்புக்கான செலவு போதாது. மேலும் 300 கோடி ரூபா தேவை என்றுமதிப்பிடப்பட்டுள்ளது.

ஈழப்போர் மூன்று உரிய முறையில் தொடங்கியதும் வெகு உக்கிரமாக இருக்கும் என்பது மட்டும் நிச்சயம். ஆகையால் மேலதிக 300 கோடி ரூபா அரசின் இராணுவச் செலவில் 'மூலைக்கும் போதாமல்' இருக்கும் என்பதே உண்மை!

இப்போது மேலோட்டமாக மதிப்பிடப்பட்டுள்ள 300 கோடி ரூபாவை எப்படிக் கண்டுபிடிப்பது என்பது குறித்து பிரதி நிதி அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறார்!

போருக்கான செலவைச் சமாளிப்பதற்காக பொருள்களின் விலையை உயர்த்தவோ, மானியங்களை வெட்டவோ முடியாது.

பாவனைப் பொருள்களின் விலைகளைக் குறைப்போம், மானியங்கள் தருவோம் என்று கூறியே பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்தது. அப்படியிருக்க, ஒரு வருடம் கழிவதற்குள் நேர்மாறான நடவடிக்கையில் ஈடுபட்டால் தெற்கில் மிகப் பெரிய அளவிலான எதிர்ப்புக்கு முகம் கொடுக்க நேரிடும்.

ஆகையால் 300 கோடி ரூபாவைக் கண்டுபிடிப்பதற்கான தேடலில் அரசு மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத நிலையில் சிக்கித் திண்டாடுகிறது!

நோட்டுக்களை அச்சிட்டு பணவீக்கத்தை உருவாக்கவோ, கடன் பெறவோ அரசு முயற்சிக்காது. இலகுவான நடைமுறைகள் மூலமே அதிகரித்த பாதுகாப்புச் செலவை ஈடுசெய்வோம் என்று அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்.

அது எப்படி? எங்ஙனம்?

தமது உத்தேச இலகு வழிமுறைகளை வெளியிட மறுக்கிறார் அமைச்சர் பீரிஸ்! இனப்பிரச்சினைக்குரிய அரசின் தீர்வுத் திட்டத்தை வெளியிடுவதற்கு 'இது தருணமல்ல' என்று சந்திரிகா கூறுவது போல, பிரதி நிதி அமைச்சரும் ஒளித்துப் பிடித்து விளையாடும் தந்திரத்தைக் கையாள்கிறார்!

சாதாரண மக்கள் மீது கைவைக்காவிடில் ஏதோ ஒரு விதமான வரி முறையாலேயே அரசு கூடுதல் நிதியைக் கண்டு பிடிக்கவேண்டும். வரி அல்லது வருமானம் பெறும் வழி யார் மீது சுமத்தப்பட்டாலும், அது இறுதியில் சாதாரண மக்களின் முதுகுகளிலேயே ஏற்றப்படும்!

ஐக்கிய தேசியக்கட்சி நடத்தும் போருக்குப் பதிலாக சமாதானத்தை உருவாக்கி போருக்குச் செலவாகும் பணத்தை அபிவிருத்திக்குப் பயன்படுத்தி மக்கள் குறைகளைத்தீர்ப்பதாக வாக்குறுதி அளித்துப் பதவிக்கு வந்த அரசு —

பொதுமக்களின் சுமைகளை மேலும் அதிகரித்து அவர்களை வாட்டி வதைப்பதற்கு முனைவது — முற்றிலும் ஏமாற்றுத்தனமாகும்.

அரசியல் தீர்வு தந்து இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதாகக் கூறிய அரசு இப்போது போர் நடத்தப் போவதாக அறிவித்து தமிழ் மக்களை எப்படி ஏமாற்றி இருக்கிறதோ —

அது போலவே சிங்கள மக்களையும் ஏமாற்றப் போகிறது!

இந்த வருட ஆரம்பத்தில் மோதல் தவிர்ப்பு நடைமுறையில் இருந்த மூன்று மாதங்களில், முதல் இரண்டு மாதங்களில் மட்டும் இராணுவச் செலவு வகையால் 500 கோடி ரூபா மிச்சப்படுத்தப்பட்டதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

மோதல் தவிர்ப்பை போர் நிறுத்தமாக்கி எத்தனையோ கோடி ரூபாவை மிச்சப்படுத்தக் கிடைத்த சந்தர்ப்பத்தை காலால் தட்டி விட்டு —

விருதுக்கு வேட்டையாடும் போக்கைக் கைக்கொண்டதால், இப்போது மேலதிக இராணுவச் செலவை ஈடு செய்ய சதம் சதமாகச் சேர்க்க வேண்டிய பரிதாபம்!

# போர் தொடர்ந்தால் மீளமுடியாத பேரழிவு வரும்; தமிழர்களை மீண்டும் மீண்டும் ஏமாற்றக்கூடாது

ஈழப்போர் மூன்று ஆரம்பித்து விட்டது. இரு தரப்பினருக்குமிடையிலும் பல திக உயிர்ச் சேதங்களும் பொருள் சேதங்களும் ஏற்பட்டுள்ளன. தரையிலும் கடலிலும் ஆகாயத்திலும் தாக்குதல்களும், எதிர்த் தாக்குதல்களும் பழிவாங்கல்களும் இடம் பெறும் வேகத்துக்கு ஏற்ப சோகமே உருவான சூழல் ஏற்படும் அதே நேரத்தில் இரு தரப்பிலும் உள்ள மக்கள் படும் இன்னல்களும் பல்கிகின்றன. இதனால் இலங்கை நாடு என்றுமே விடுவித்துக் கொள்ள முடியாத போர் இடர்களுக்கும் பேரழிவுகளுக்கும் உட்படும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

மீண்டும் ஒருமுறை மோதல்களைத் தவிர்த்துக் கொண்டு மாநாட்டு மேசைக்குச் சென்று சமாதானத்துக்கான வழிகளை ஆராயுமாறு இச் சண்டையில் மோதிக் கொள்கின்ற இரு தரப்பினர்களையும் நாங்கள் வேண்டுகிறோம். பண்டைப் பெருமதங்களின் மரபுகளும் ஆழ்ந்த கலாசார பாரம்பரியங்களும் இலங்கையில் உள்ளன. அதே போன்று மிக நவீன அரசியல் முறைகளும் இந்நாட்டில் வேரூன்றியுள்ளன. இவ் வருகை ஊற்றுக்களிலிருந்தும் நாங்கள் ஆன்மீகச் சக்தியைப் பெறுவதன் மூலம் எமக்கிடையிலான மோதல்களுக்கு ஒரு தீர்வினைக் காணுதல் வேண்டும்.

### யுத்தத்தின் யதார்த்தம்

யுத்தம் மீண்டும் மூண்டதொரு சூழல் ஒன்றில் மீண்டும் மோதல்களைத் தவிர்த்தலானது மிக அரிதான காரியமென்பது எங்களுக்குத் தெரியும். யுத்தம் புரிந்தே ஆக வேண்டுமென்ற கருத்தினை ஆதரிப்பதற்கு இரு தரப்பினரும் முன் வைக்கும் பல காரணங்கள் இருப்பதுடன் யுத்தமும் சில காலம் தொடரலாம்.

ஆனால் யுத்தத்தின் யதார்த்தத்தையும் யுத்தத்தைத் பாதிக்கும் பெரும் சிக்கல் வாய்ந்த பல்வகைப்பட்ட காரணிகளையும் உற்று நோக்குமிடத்து வரையறுக்கப்பெற்ற காலப் பகுதிக்கு ஒரு தரப்பினர் அல்லது ஏனைய தரப்பினர் வெற்றிவாகை சூடும் வாய்ப்பு உள்ளதெனில் எத்தரப்பினரும் யுத்தத்தில் உறுதியான வெற்றியை அடைய முடியாது என்பது புலனாகும். யுத்தம் நீண்டு கொண்டு செல்வதுடன் பொது மக்களது இன்னல்களும் நீண்டு கொண்டே செல்லும்.

இலங்கைப் பாதுகாப்புப் படைகளுக்குத் தலைமை தாங்குகின்ற திறமை மிக்க மற்றும் அனுபவம் மிக்க தளபதிகள் சிலரின் அபிப்பிராயம் கவனத்தில் எடுக்கப்படுவது நல்லது.

சதா விழிப்புடன் இருப்பதும், ஒரு வரையறைக்குட்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதும் அவசியமாக இருந்த போதிலும் இந்தத் தகராற்றை சண்டையிடுவதன் மூலம் தீர்க்க முடியாது. சமாதான அரசியல் பேச்சுவார்த்தைகளின் மூலமே தீர்வுக்கான வழி பிறக்கும் என்பதே அவர்களின் கருத்து.

1995 ஜனவரி 9ஆம் திகதி அமுலுக்கு வந்த மோதல் தவிர்ப்பின் பின்னரும் அதற்குச் சிலகாலத்துக்கு முன்னரும் சமாதானத் தீர்வொன்றைக் காணமுடியும் என்ற நம்பிக்கையைப் பொதுமக்கள் பலரும் கொண்டிருந்தனர். நாடெங்கிலும் உள்ள மக்களது வேணவா இதுவே.

சண்டையோடு தொடர்பு கொண்ட இரு தரப்புத் தலைவர்களும் மக்கள் கொண்டிருந்த இந்த அபிலாஷைக்கு அனுகூலமாகவே நடந்து கொண்டனர். முயற்சி தோல்வி கண்டதெனினும் அமைதி நிலவிய காலம் அதுவரை நீண்டிருந்த ஒரு பெரு வெற்றியாகும். இரு தரப்புக்களையும் சேர்ந்த தலைவர்களை இதற்குப் பாராட்ட வேண்டும்.

ஜனாதிபதி அவர்கள் அடுத்தடுத்து வந்த மூன்று தேர்தல்களிலும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் சமாதான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்லவும் நாட்டு மக்களது ஆணையினைப் பெற்றுக்கொள்ள எடுத்த முயற்சிக்காகப் பெரிதும் பாராட்டப்பட வேண்டியவர் ஆவார்.

### புலிகளும் பாராட்டுக்கு உரியவர்கள்

சமாதானப் பேச்சு வார்த்தைகளில் பங்குபற்ற தமிழீழ விடுதலைப் புலிகள் காட்டிய அக்கறையும் பாராட்டுக்குரியதே.

ஆனால் சமாதானம் பற்றிப் பலர் பெரு நம்பிக்கை கொண்டிருந்த அதே நேரத்தில் இன்றும் பலர் பெரும் சந்தேகமும் கொண்டிருந்தனர். எவ்வித ஆதாரமுமின்றி நம்பிக்கை வைத்தவர்களும் பலர் இருந்தனர். அவர்கள் பல தடைகளையும் முரண்பாடுகளையும் கண்டனர்.

எனவே தற்பொழுது இரண்டு தரப்பினர்களும் மோதல் தவிர்ப்பு நிலவிய காலத்திற்குரிய சமாதானச் செயல்முறையினை மதிப்பீடு செய்ய முன்வர வேண்டும். எங்கே பிழைகள் ஏற்பட்டன என்பனவற்றை ஆராய்தல் வேண்டும். இது தொடர்பில் திறந்த சம்மதம் இடம் பெறுதல் வேண்டும். மனம் விட்டுப் பேசுதல் வேண்டும்.

### மீளாய்வு தேவை

தற்பொழுது காணப்படுவதைப்போல ஒருவர் மற்றவரைக் குறை கூறுதல் மாத்திரம் போதாது. ஒவ்வொரு

## சமாதானப் பேச்சில் புலிகளின் அணுகுமுறை துறைதோய்ந்தது

தரப்பினரும் மறுதரப்பினரது எண்ணப் போக்குகளை உணர்ந்து செயற்படுதல் வேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டதெனக் கூறி பாதுகாப்பு நடவடிக்கைகளை அசட்டை செய்தல் ஆகாது. விழிப்புடைமையும் உசார் நிலையும் பேணப்படுதல் வேண்டும்.

சமாதான ஒழுங்குகளின் முன்னேற்றத்திற்கு ஏற்பவும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுக்கு ஏற்பவும் கண்காணிப்பு சபைகளின் நிறுவுகைக்கு ஏற்பவும் கண்காணிப்பு நடைமுறைகளைச் செயற்படுத்துகைக்கு ஏற்பவும் பரஸ்பர நம்பிக்கை உருவான பின்னரே விழிப்பினை தளர்த்தல்பற்றி ஆலோசித்தல் வேண்டும்.

இந்த விடயங்களில் இணக்கம் காணும் அளவுக்கு படிப்படியாக ஆயுதபரிகரணமும் இராணுவச் செயற்பாடுகளைக் கைவிடுதலும் மேற்கொள்ளப்படலாம்.

இது சம்பந்தமாக விடுதலைப் புலிகள் இயக்கம் பின்பற்றிய அணுகு முறை துறை தோய்ந்த முறையாகும். அவ்வணுகு முறையைக் கண்டு நாங்கள் வியப்பில் ஆழ்ந்துள்ளோம்.

அதே நேரத்தில் மனக்கிலேசமும் அடைந்துள்ளோம். ஆனால் தமிழ் மக்கள் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளாலும் தோல்வி கண்ட எதிர்பார்ப்புக்களாலும் பல காலமாகக் கசப்பான படிப்பினைகளைப் படித்தவர்கள் என்பதை நாங்கள் மறந்துவிடுகின்றோம். மிக உறுதியான காரணங்கள் இல்லாமல் அவர்கள் தமது பிடியை விடுவார்கள் என நாம் எதிர்ப்பார்த்தலாகாது.

### தவறான அணுகு முறை

அரசாங்கத்தின் அணுகுமுறையானது அனுபவம் இல்லாத முறையென்பதுடன் அது 1990 இல் தோல்வி கண்ட பேச்சுவார்த்தைகளிலிருந்து எந்தவித படிப்பினையும் கற்றதாகத் தென்படவில்லை. பேச்சுவார்த்தைகளுக்கான முதல் இரண்டு தூதுக் குழுக்களிலும் வங்கியாளர் ஒருவரையும் கட்டடக் கலைஞர் ஒருவரையும் சேர்த்துக் கொள்ள அரசாங்கம் எடுத்த முடிவும் வடக்கில் புனரமைப்பு, புனர்நிர்மாண பணிகளுக்கென ரூபா 400 கோடி ரூபாவையும், கிழக்கில் புனரமைப்பு புனர்நிர்மாண வேலைகளுக்கென மேலும் ரூபா 300கோடி ரூபாவையும், (இந்தச் செலவினத்தை மேற்கொள்ள போதுமான நிதிகள் அரசாங்கத்துக்கு இருந்ததா என்பது தெளிவாகக் கூற முடியாது) வழங்க அரசாங்கம் எடுத்த முடிவும் நன்கொடைகளை வழங்குவதன் மூலம் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரையும் யாழ்ப்பாண மக்களையும் வென்றெடுக்க முடியும் என அரசாங்கம் எண்ணியதெனக் காட்டுகின்றது. புனரமைப்புக் குழுவின் தமக்கு [illegible] வேண்டுமெனவும் தீர்மானமெடுப்பதிலும் தமது போராளர்கள் பங்குபற்ற வேண்டுமெனவும் கூறி விடுதலைப் புலிகள் செய்தி அனுப்பினர்.

சிங்கள ஆதிக்கத்துக்கு உட்பட்ட அரசாங்கமொன்றின் விருப்பத்தின் பேரில் வழங்கப்படுகின்ற நன்கொடை தமிழ் மக்களை திருப்திப்படுத்தவியலாது என்ற உண்மையை அரசாங்கம் புரிந்து கொள்ளுதல் வேண்டும். இந்த கொடைகள் வேறு அரசாங்கம் பதவிக்கு வந்தவுடன் தடுக்கப்படலாம்.

> இலங்கையின நீதியும் சமாதானத்துக்குமான உலக ஒத்துழைப்பு மன்றத்தின் இலங்கைக்குழு விடுத்த அறிக்கையின் தொகுப்பு இது.

தமது திட்டங்களைத் தாமே வகுத்துக் கொள்ளவும் தமது தீர்மானங்களை தேவைபேற்படின் மத்திய அரசுடன் கலந்தாலோசித்து தாமே எடுக்கவும் துணைபுரியும் வண்ணம் அரசியலமைப்புச் சீர்திருத்தமே அவர்களின் தேவையாகும். வேறு விதமாகக் கூறின், அதிகாரக் கையளிப்புத் திட்டமொன்றை அரசாங்கங்கள் தமிழ் மக்களிடம் சமர்ப்பிக்க முன்னுரிமை வழங்கியிருத்தல் வேண்டும்.

### அதிகாரம் கையளிப்பு

அதிகாரக் கையளிப்புத் திட்டம் பற்றிய பொது அறிவிப்பொன்றைச் செய்தலானது அரசாங்கத்தின் சமாதானச் செயல் முறையின் முதல் நடவடிக்கையாக இருந்திருத்தல் வேண்டும். இப்பொழுது அறிவிப்புக்கு முன்னர் பொது இணக்கத்தை எய்து நோக்கில் உளவுதல் செய்முறையொன்றை மேற்கொண்டிருக்கலாம்.

பிரதான அரசியல் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் ஐக்கிய தேசியக் கட்சியினதும் ஒப்புதலைப் பெறுதல் இன்றியமையாததே. தமிழ்க் கட்சிகளினதும் குழுக்களினதும் இணக்கமும் இன்றியமையாததே.

எனவே காரணங்களை எடுத்துரைத்து மத்தியஸ்தம் செய்யும் செயல்முறையின் மூலம் பொது இணக்கத்தை எய்த வழி பிறந்திருக்கும்.

சமஷ்டி அடிப்படையில் உண்மையான அதிகாரப் பங்களிப்பினை வழங்க நடவடிக்கை எடுக்குமாயின் ஈழம் கோரிக்கையைக் கைவிடத் தயாராக உள்ளோமென விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் பல முறை கூறியுள்ளனர்.

உண்மையில் சமஷ்டி அல்லது ஒற்றையாட்சி ஆகிய சொற்கள் எவற்றையேனும் பயன்படுத்தாமல், போதுமான அதிகாரக் கையளிப்புடன் கூடிய நியாயமான முறைமையொன்றை ஆக்கித்தர அரசியலமைப்பு நிபுணர்களுக்கு அறிவு இருத்தல் வேண்டும். பரஸ்பர நம்பிக்கை ஏற்பட்ட போது அத்தகைய முறைமையானது அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தக்கதொன்றாகவும் அனைவரும் செயற்படுத்தக் கூடியதொன்றாகவும் இருக்கும்.

அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் மூலம் போதுமான அதிகாரக் கையளிப்பு கோட்பாட்டினை ஏற்றுக்கொள்ளும்படி கோரி, கடந்த மூன்று வருடங்களில் உலக ஒத்துழைப்பு மன்ற இலங்கைக் குழுவினர் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பிரசார இயக்கமொன்றை மேற்கொண்டனர்.

அரசாங்கங்களையும் அரசியல் கட்சிகளையும் மத நிறுவனங்களையும் ஏனைய குழுக்களையும் வற்புறுத்தி வந்தனர். அத்தகைய போதுமான அதிகாரக் கையளிப்பானது நாட்டின் ஏனைய பிரதேசங்களுடன் சகவாழ்வோடும் பரஸ்பரம் வாழக் கூடிய சந்தர்ப்பத்தை வடக்கு கிழக்கு மக்களுக்கு வழங்கும். அது [illegible] போதுமான அதிகாரக் கையளிப்பு [illegible] சுயாட்சியினை ஏற்படுத்த வழி வகுக்கும்.

அத்தகைய அதிகாரக் கையளிப்புக் கூறு ஒன்றின் அளவினையும், எல்லைகளையும் முஸ்லிம் மக்களது நிலைப்பாடு உள்ளிட்ட ஏனைய பிரச்சினைகளையும் பேச்சுவார்த்தைகளின் வாயிலாக தீர்த்தல் வேண்டும்.

### சிங்களவரின் உரிமைகள்

சிங்களப் பெரும்பான்மையின மக்களது நியாயமான உரிமைகளையும் இந்த நாட்டில் பௌத்த மதத்துக்குள்ள உண்மையான நிலைப்பாட்டினையும் அம்மதத்தின் அக்கறை நலன்களையும் பேணுவதற்கு அவசியமான அரசியலமைப்பு ஒழுங்குகளை செய்வதில் தப்பில்லை.

அதே நேரத்தில் மேற்கூறிய வாறான அதிகாரக் கையளிப்பினை உறுதிப்படுத்த முடியுமென நாங்கள் நிச்சயமாகக் கருதுகின்றோம். சிங்கள பௌத்த பெரும்பான்மையின மக்களது உரிமைகளைப் பாதுகாப்பதிலும் அவ்வுரிமைகளுக்கு குரல் கொடுப்பதிலும் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

சட்டவாக்கங்களை நிறைவேற்றுதல் மட்டும் போதாது என்பதை நாங்கள் உணர்ந்துள்ளோம். பயனுறுதி வாய்ந்த செயற்படுத்துகையும் இடம் பெறுதல் வேண்டும். தேவையான சட்டவாக்கம் நிறைவேற்றப்படும் வரை போதுமான அதிகாரக் கையளிப்புக் கோட்பாட்டினை ஏற்றுக் கொள்ளுமாறு நாடெங்கிலும் பிரசார இயக்கத்தை மேற்கொள்வதற்கு மட்டுமன்றி அச்சட்டங்களை சரியாகச் செயற்படுத்தும் வரை அயராது செயல்படவும் உலக ஒத்துழைப்பு மன்ற இலங்கைக்குழு திடசங்கற்பம் கொண்டுள்ளதென்பதை இங்கு கூற விரும்புகின்றோம்.

அதிகாரமுள்ள தலைவர்கள் மேற்கொள்ளும் பணிகள் யாவும் நாட்டில் வாழுகின்ற பொதுமக்களால் புரிந்துணர்வுடன் ஆதரிக்கப்பட வேண்டுமென நாங்கள் கருதுகின்றோம்.

### மாகாண சபைகள்

இங்கு மாகாண சபைகள் பற்றியும் ஒரு வார்த்தையைச் சொல்ல வேண்டும். இச்சபைகள் சரியான முறையில் இயங்கத் தவறியுள்ளன அல்லது அவற்றின் நோக்கத்தை நிறைவேற்றத் தவறியுள்ளன எனக்கூறி இச்சபைகளை ஒழிக்க வேண்டும் என வாதாடுபவர்கள் சிலரும் உள்ளனர். அவ்வாறாயினும் ஏனைய பிரதிநிதித்துவ சபைகளைப் பற்றியும் ஓரளவுக்குப் பாராளுமன்றத்தைப் பற்றியும் அப்படி கூற முடியும், எவ்வாறாயினும் அதிகாரக் கையளிப்பு அவசியமெனக் கருதும் பட்சத்தில் அதிகாரத்தைக் கையளிப்பதற்கான வழிவகைகள் இருக்கத் தான் வேண்டும். அச்சபைகள் சரியாக இயங்குவதில்லையெனக் கூறி அவற்றை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் அவை சரியான முறையில் செயற்பட ஆவன செய்தலே அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழியாகும்.

இதனைச் சாதிப்பதற்கு அச்சபைகளின் பணிகளும் தத்துவங்களும் தெளிவாக வரையறை செய்யப்படுதல் வேண்டும். அத்துடன் மக்களது நிலையும், மக்களுக்குரிய தத்துவங்களும் மக்களது செயற்பாடுகளும் மேம்படுத்தப்படல் வேண்டும். இங்ஙனம் சனநாயக செயல் முறைகளைப் பேணி வளர்ப்பதற்கு இடையறாத போராட்டமொன்று நடத்தப்படுதல் வேண்டும்.

### தடை நீக்கம்

இணக்கம் காணத்தவறிய இந்தப் பிரதான விடயம் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டியதொன்றாகும். ஒவ்வொரு தரப்பினரும் மற்றவர்களின் குறைகளைக் காண்பதற்கு அல்லது கண்டனம் தெரிவிப்பதற்கு மட்டுமல்லாமல் மற்றத்தரப்பினரின் எண்ணங்களையும் உணர்வுகளைக் கண்டறியவும் முன்வரக் கடமைப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முன்னைய எந்த அரசும் எடுக்காத அளவுக்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளதென இந்த அரசாங்கம் கருதுகின்றது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையைப் பற்றி உள்நாட்டுத் தொடர்பு சாதனங்களில் மட்டுமன்றி வெளிநாட்டுத் தொடர்புச் சாதனங்களிலும் பெரும் பிரசாரம் அளிக்கப்பட்டது. இதனைக் கருத்திற் கொண்ட அரசாங்கமும், தென்பகுதி பொதுமக்களும் "நாம் வடபகுதிக்கு மிகப்பெரிய வசதிகளை ஏற்பாடு செய்துள்ளோம் எனவே விடுதலைப் புலிகள் இன்னும் கூடுதலான வசதிகளை வழங்கக் கோருதல் நியாயமற்ற செயல் எனக் கருதுகின்றனர்.

ஆனால் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து தென் இலங்கைக்கு விஜயம் செய்பவர்களின் ஊடாக எமக்கு எட்டிய செய்திகள் சில புறநடைகளுக்கு உட்பட்டு அதற்கு மாறான நிலவரத்தைத் தான் எடுத்துரைக்கின்றன.

தேர்தல்களுக்குப் பின் கடந்த எட்டு மாதங்களில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வாழ்க்கை நிலையில் குறிப்பிடத்தக்க வித்தியாசம் ஏற்படவில்லை எனவும் அல்லது மிகச் சிறிய வித்தியாசமே ஏற்பட்டதெனவும் சிலர் கூறுகின்றனர். மிகப் பாரிய மாற்றம் ஏற்படவில்லையாயினும் மந்தகதியைக் கொண்ட மாற்றத்துடன் குறிப்பிடத்தக்க வித்தியாசம் ஏற்பட்டுள்ளது என வேறு சிலர் கூறுகின்றனர்.

அரசாங்க மாற்றத்திற்கு முன்னர் யாழ்ப்பாணத்தின் உணவு மற்றும் ஏனைய தேவைகளின் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே அங்கு போய்ச் சேர்ந்ததென்பதும் தெற்கில் நிலவிய விலை விகிதங்களுடன் ஒப்புநோக்கப்படுமிடத்து மிக அதிக விலை விகிதங்கள் அங்கு நிலவியது என்பதும் நினைவில் கொள்ள வேண்டும். இந்த நிலைமை சற்றேனும் மாறவில்லையென சிலர் கூறும் அதே நேரத்தில் மந்தகதியில் சிறுமாற்றம் ஏற்பட்டது எனவும் ஏனைய சிலர் கூறுகின்றனர்.

மேலும் கவனத்திற் கொள்ளவேண்டிய வேறு பல காரணிகளும் உள்ளன. கறுப்புச்சந்தைகளிலும் கள்ளத்தனமாக இலாபத்தை ஈட்டுவதிலும் அக்கறை கொண்ட இராணுவத்தினரும் அலுவலர்களும் விதிக்கும் தடைகளும் அரசாங்கத்தின் உத்தரவுகளுக்கு பணிந்து செயற்படாமையும் குறிப்பிடப்படலாம். இது கவனத்திற் கொள்ளவேண்டிய காரணியாகும். இராணுவ காரணங்களையிட்டு போக்குவரத்துப் பாதைகளை மூடுதலும், போக்குவரத்து வசதியின்மையும் இன்னொரு காரணியாகும்.

### வடக்கின் அரசாங்கம் புலிகளே

வடக்கின் உண்மையான அரசாங்கம் விடுதலை புலிகள் இயக்கம் என்பதும் பண்டவிநியோகத்தைப் பொறுத்தவரை அரசாங்கம் விடுதலைப்புலிகளை நம்ப வேண்டியுள்ளது என்பதும் இங்கு தென்இலங்கையில் வாழும் பலருக்கு தெரியாத விடயமாகும். அண்மையில் தரைப்படைத்தளபதி வடக்கிலுள்ள இராணுவ முகாம்களிலும் பல மாதங்களுக்குப் போதுமான உணவுப் பொருட்கள் இருப்புகள் உண்டென அம்பலப்படுத்தினார்.

அதேபோன்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினரும் தமது ஆளணியினருக்குப் போதுமான உணவு இருப்புக்களைப் பேணுவதில் உறுதிபூண்டுள்ளனர். அந்தப் பண்டங்களை அவர்கள் தென் இலங்கையில் இருந்து அல்லது வேறுஇடத்திலிருந்து சில போது அந்த இரண்டு மூலங்களின் ஊடாகவும் பெற்றுக் கொள்வார்கள். இது வொரு ஒழுங்கு மீறியநிலை என்பதில் ஐயமில்லை ஆனால் இன்றைய சூழலிலே அது வேறுவிதமாக இருப்பதற்கு எந்தவித சாத்தியக்கூறுகளும் இல்லை.

இங்கு முக்கிய காரணியாதெனில், போதுமான பண்டங்கள் யாழ்ப்பாண மக்களிடம் போய்ச்சேருகின்றனவா? என்பதும் அவ்வாறு பண்டங்கள் போய்ச்சேருவதை உறுதிப்படுத்த ஏதேனும் வழி உண்டா என்பதும் ஆகும்.

### தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டனர்

கடந்த காலங்களில் தமிழ் மக்கள் மீண்டும் மீண்டும் ஏமாற்றப்பட்டுள்ளனர். அவர்களுக்கு வாக்குறுதிகள் வழங்கப்பட்டு மீறப்பட்டுள்ளன. தற்சமயம் அரசாங்கம் இதுவரையும் அதிகாரக்கையளிப்புத்திட்டத்தை அம்பலப்படுத்தவில்லை.

இது வரையும் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்ட தூதுக்குழு அங்கத்தவர்கள் எவருக்கேனும் போதுமான அரசாங்க அதிகாரம் இருக்கவில்லை.

இங்ஙனம் நோக்குமிடத்து இரண்டு தரப்பினர்களுக்கும் இடையிலும் பல சந்தேகங்கள் நிலவுவதைக் காணலாம். தாம் கொண்டுள்ள சந்தேகங்கள் ஏனைய தரப்பினர் கொண்டுள்ள சந்தேகங்களை விட உண்மையானவை என ஒவ்வொரு தரப்பினரும் கருதுவது நிச்சயமாகும்.

இவை எளிதில் அகற்ற முடியாதவை நீண்டதும், பாரதூரமான சமவாதங்களும் பேச்சுவார்த்தைகளும் இடம் பெறுதல் அவசியமாகும்.

முதல் மூன்று பேச்சுவார்த்தைகள்ஒவ்வொன்றும் நான்கு மணித்தியாலங்களுக்கே மட்டுப்படுத்தப்பட்டன. இந்த நேரம் போதுமானதென கூற முடியாது.

முட்டுக்கட்டைகளைஉடைத்தெறியும் வழிவகையை மிகவும் நிதானமாக தேடுதல் வேண்டும்.

இதனைச் சாதிப்பதற்கு மத்தியஸ்தம் செய்யும் சபைகளை மற்றும் கண்காணிப்புச் சபைகளை நிறுவி இயங்கவைத்தல் வேண்டும்.

★

---

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு

## நீரிறைக்கும் யந்திரங்கள் எடுத்துவர அனுமதி மறுப்பு

யாழ். மாவட்ட விவசாயிகளின் தேவைக்கென யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்ட நீரிறைக்கும் இயந்திரங்களை வடபகுதிக்கு எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சங்கங்களின் ஊடாக விண்ணப்பித்த விவசாயிகளுக்கு 200 நீரிறைக்கும் இயந்திரங்களை எடுத்துவர யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஏற்பாடு செய்திருந்தது. (ஓ-4)

## வறுமைநிவாரணமுத்திரை விரைவில் 9 ஆவது தொடர் வழங்கப்படும என அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 27

வறுமைநிவாரண உணவு முத்திரைகள் பெறும் குடும்பங்களுக்கு 9ஆவது தொடர் வறுமைநிவாரண உணவு முத்திரைகள் மிகவிரைவில் வழங்கப்படவுள்ளன.

கடந்த மார்ச் மாதம் முடிவடைந்த 8ஆவது தொடர் வறுமைநிவாரண உணவு முத்திரைகளுக்குப் பதிலாக 9 ஆவது தொடர் வறுமை நிவாரண உணவு முத்திரைகள் வழங்கப்படவுள்ளன.

வழங்கப்படவுள்ள வறுமை நிவாரண மண்எண்ணெய் முத்திரையில் ஒரு புள்ளியின் பெறுமதி ரூபா 29/- என்று இருக்கின்றது ஆனால் ரூபா 44/- இற்கு பொருள்கள் வழங்கப்படவுள்ளதாக யாழ். செயலக சமூகசேவைப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். (ஓ-175)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 27

"உதயன்" நாழிதழின் 10 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி உதயன் வெற்றிக்கிண்ணத்துக்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் மாவட்ட ரீதியில் நடத்தும்— ஏழு பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான— வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பருத்தித்துறை இக்க முனையில் உள்ள கழக மைதானத்தில் இன்று நடக்கும் போட்டிகளில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

★ பி.ப. 3.45 — அல்வாய் நண்பர்கள் 'பி' அணி எதிர் கொற்றாவத்தை சிவானந்தர் 'பி' அணி.

★ பி.ப. 4.45 — வல்வை 'பி' அணி எதிர் புதுத்தோட்டம் சுடர் ஒளி அணி.

★ ★ ★

வண. சகோதரர் ஹில்லறி ஜோசப் ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணம் லாசாலா சகோதரர்கள் சபை யாழ். பல்கலைக்கழக ஆதரவில் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ பி.ப. 3 மணி— சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி எதிர் சென்றலைட்ஸ் 'சொக்ஸ்' அணி.

★ பி.ப. 4 மணி— பல்கலைக்கழக 'பி' அணி எதிர் ஒல்ட் கோல்ட்ஸ் அணி.

(இ-3)

★ ★ ★

வலி– கிழக்கு உதைபந்தாட்டச் சங்கம் இணைந்த கழகங்களுக்கிடையில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் போட்டிகளில் மோதும் கழக அணிகள் வருமாறு:-

★ பி.ப 3 மணி— கேணடி அணி எதிர் சரஸ்வதி அணி.

★ பி.ப 4 மணி ஸ்ரீவ கீஸ்வர் அணி எதிர் உதயசூரியன் அணி

★ பி.ப 5 மணி—விண்மீன் அணி எதிர் பொற்பதி அணி.

(இ-3)

★ ★ ★

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு மோகனதாஸ் சனசமூக நிலையத்தினர் நடத்தும் யாழ் மாவட்ட தென்மராட்சி பிரிவு ரீதியான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை பங்குபற்றும் அணிகளின் விவரம்

★ பி.ப 3.00 மணிக்கு மிருசுவில் ஒலிம்பிக் வி.க எதிர் சாவகச்சேரி ஸ்ரீதாஸ் வி.க.

★ பி.ப. 4.00 மணிக்கு புங்குடுதீவு அம்பாள் வி.க. எதிர் நுணாவில் தேவகி வி.க. (இ-117)

## தென்மராட்சி மெய்வல்லுநர் போட்டிகள்

தென்மராட்சி, மே 27

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மட்டுவில் மகா வித்தியாலய மைதானத்தில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இப்போட்டிக்கு முதன்மை விருந்தினராக யாழ் கல்வி வலயம் 1 கல்விப் பணிப்பாளர் இ. சிவானந்தனும், சிறப்பு விருந்தினராக தமிழீழ சமூக மேம்பாட்டுப் பொறுப்பாளர் இ. பாப்பாவும் கலந்து கொள்வர்.

இதற்கிடையில் இன்று நடைபெற உள்ள மெய்வல்லுநர் இறுதிப் போட்டிகளை பொட்டி தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்களை மூடி ஒத்துழைக்குமாறு தென்மராட்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கோரியுள்ளார்.

(இ-117)

## நெல்லியடியில்

கல்வித் திணைக்களம் யாழ் வலயம் 2இன் வலய மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் கல்விப்பணிப்பாளர் திரு. க. கந்தசாமி தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக வடக்கு கிழக்கு மாகாண கல்வியமைச்சின் பிரதிச் செயலாளர் சுந்தரம் டிவகலாலா கலந்து கொள்வார்.

(இ)

## சிறுவர் விளையாட்டு போட்டி

யாழ்ப்பாணம், மே 27

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழக சிறுவர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

(ஐ)

## பணிப்பாளர் சபை தெரிவு

யாழ்ப்பாணம், மே, 27

யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் 11 பேர் கொண்ட புதிய பணிப்பாளர் சபை சென்ற சனிக்கிழமை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

(ஒ-4)

---

மட்டு. இருதயபுரத்தில் பழிவாங்கும் செயல்;

# தமிழ் இளைஞர்கள் கொலையானது குறித்து பாரபட்சமற்ற விசாரணை நடத்தவேண்டும்

## சந்திரிகாவிடம் தமிழ் எம். பி. கடித மூலம் கோரிக்கை

கொழும்பு, மே 27

"இருதயபுரத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் மூவர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணை ஒன்று நடத்தப்படவேண்டும்."

மட்டக்களப்பு மாவட்ட எம். பி. ஜோசப் பராராசசிங்கம், ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ரவிச்சந்திரன் ரகுநாதன் [வயது–20], இராசலிங்கம் மரியதாஸ் [வயது–37], நடராஜா பரராஜசிங்கம் [வயது–21] ஆகிய மூன்று இளைஞர்களும் இம்மாதம் 23 ஆம் திகதி அதிகாலையில், ஜயந்திபுரம் பொலிஸாரால், விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதை அவர்களது பெற்றோரும், உறவினர்களும் என்னிடம் தெரிவித்தனர்.

ஜயந்திபுரம், விஜயபுரம் ஆகிய பொலிஸ் நிலையங்கள் தாக்கப்பட்டதை அடுத்தே இவர்கள் கூட்டிச் செல்லப்பட்டனர்.

குறிப்பிட்ட இந்த இரண்டு பொலிஸ் நிலையங்களும் மட்டக்களப்பு நகர எல்லைக்குள் அமைந்துள்ளன.

ஜயந்திபுரம் பொலிஸ் நிலைக்கு அதிற்குச் சமீபமாக பனை மரங்களுக்குக் கீழ் இந்த மூன்று இளைஞர்களின் சடலங்களும் பின்னர் கண்டெடுக்கப்பட்டன.

ஜயந்திபுரம், விஜயபுரம் ஆகிய பொலிஸ் நிலையங்கள் தாக்கப்பட்ட போது ஒரு சப் இன்ஸ்பெக்டர் உட்பட ஆறு பேர் கொல்லப்பட்டதற்கு பழிவாங்கும் முகமாகவே இந்த இளைஞர்கள் கொல்லப்பட்டிருக்கலாம்.

இந்த விவரங்கள் கிழக்கு பிராந்திய மேஜர் ஜெனரல் ஹப்பு ஆராச்சிக்கும், மட்டக்களப்பு எஸ். பி. உபாலி ஹேவகேக்கும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளன.

1990 ஆம் ஆண்டில் இவ்வாறு பழிவாங்கும் கொலைகளும், எரிப்புகளும் ஏராளமாக இடம்பெற்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏராளமானோரின் சடலங்கள் டயர் போட்டு எரிக்கப்பட்டன.

இங்கு மனித உரிமைகள் பாரிய அளவில் மீறப்பட்டன. ஏராளமானோர் காணாமல் போயினர். இவற்றை தாங்களும் நினைவு கொள்வீர்கள்.

இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் தொடர்ந்து இடம்பெற நீங்கள் அனுமதிப்பீர்களேயானால் தங்களதும், தங்கள் அரசினதும் மதிப்பு சர்வதேச சமூகத்தின் முன் மங்கிவிடும்.

எனவே இது குறித்து பாரபட்சமற்ற முறையில் விசாரணை நடத்தி, உண்மையை வெளிக் கொணரவும், இத்தகைய சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறாமல் தடுக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

— இவ்வாறு அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஒ-5)

# மீண்டும் இந்தியப்படை வந்தால் வரவேற்போம்!

## தினேஷ் குணவர்தன கூறுகிறார்

கொழும்பு, மே 27

விடுதலைப்புலிகள் இயக்கம் "சார்க்" பிராந்திய நாடுகளுக்கு அச்சுறுத்தலாக உள்ளது– என்று இந்தியப் பிரதமர் கூறியுள்ளார். விடுதலைப் புலிகளை நிராயுதபாணிகளாக்க அல்லது அழிக்க இந்தியப் படையினர் மீண்டும் இலங்கை வந்தால் அது வரவேற்கத்தக்கது; பாராட்டத்தக்கது.

— மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த முறை இந்தியபடை அரசியல் தீர்வை அமுல்செய்ய வந்த காரணத்தால் இந்தியப்படை இங்கு நிலைகொண்டிருப்பதை எதிர்த்தோம்.

சட்டரீதியற்ற ஆயுத இயக்கமான விடுதலைப் புலிகள் இயக்கத்தை நிராயுதபாணிகளாக்க அல்லது அழிக்க இந்தியப்படை மீண்டும் வந்தால் அதனை ஆதரிப்போம். இந்தியப் படையின் வருகையை அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும்.

இவ்வாறு தினேஷ் குணவர்தன மேலும் தெரிவித்தார்

1987 ஆம் ஆண்டில் இந்திய அமைதிப் படையினர் இலங்கைக்கு வந்தபோது அதனை முன்னின்று எதிர்த்தவர் தினேஷ் குணவர்தன என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## குருநாகல் அரச அதிபர் தற்கொலை

கொழும்பு, மே 27

குருநாகல் மாவட்ட அரசாங்க அதிபர் டிங்கிரி பண்டாரணதுங்க தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

கடந்த செவ்வாயன்று மாலை அவரது வாசஸ்தலத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

அவர் அண்மையில் மருத்துவ சிகிச்சைக்காக இந்தியா சென்று வந்தார். அவரது தற்கொலைக்கான காரணம் தெரியவரவில்லை. (ஐ)

## நினைவுக்கல் நடுகல்

யாழ்ப்பாணம், மே 27

கடந்த 20 ஆம் திகதி மூதூரில் ஏற்பட்ட திடீர் மோதலில் வீரச்சாவடைந்த கப்டன் தேன்மொழி அல்லது டெஸ்மனின் (கந்தாரவேல் இரவிச்சந்திரன் — திருமலை) இறுதி வணக்கமும் நினைவுக்கல் நடுகலும் இன்று நடைபெறவுள்ளது.

பற்பகல் 3 மணிக்கு நீர்வேலி இல்லத்தில் இருந்து அவரது உருவப்படம் அணிவகுப்பு மரியாதையுடன் எடுத்துச் செல்லப்பட்டு நீர்வேலி மாவீரர் மண்டபத்தில் வைக்கப்படும். அங்கு இறுதி வீரவணக்க கூட்டம் நடைபெறும் பின்னர் உருவப்படம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்படும். அங்கு இராணுவ மரியாதைகளுடன் நினைவுக்கல் நடப்படும். (ஐ)

## யாழ். இளைஞர் சிலாபத்தில கைதானார்!

கொழும்பு, மே 27

சிலாபத்தில் வைத்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரிடம் 14 கடவுச்சீட்டுகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் விசாரணைக்காக குற்றத் தடுப்பு புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் மருதானைப் பகுதியில் கடந்த திங்களன்று விடுதிகள் சிலவற்றில் தேடுதல் நடத்திய பொலிஸார் 10 தமிழ் இளைஞர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

## கண்டித்து அறிக்கை

கொழும்பு, மே 27

கிழக்கில் முஸ்லிம், சிங்கள மக்கள் படுகொலை செய்யப்பட்டிருப்பதை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு கண்டித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது

யுத்தத்தின் மத்தியில் பொதுமக்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்று அந்த அறிக்கையில் வற்புறுத்திக் கூறப்பட்டுள்ளது.

படுகொலை நடந்த இடத்துக்கு நேற்றுக்காலை சென்ற செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் கொல்லப்பட்டவர்களின் சடலங்களைப் பார்வையிட்டனர்.

(ஐ-6)

நோட்டமிட்டு படம் எடுத்தாராம்:

# விமான நிலையத்தில் தமிழ் இளைஞர் கைது!

கொழும்பு, மே 27

கட்டுநாயக்கா விமான நிலையத்தை நோட்டமிட்டு படம் எடுத்ததாக வடபகுதியைச் சேர்ந்த இராமேஸ்வரன் என்ற இளைஞரை சந்தேகத்தின் பேரில் கட்டுநாயக்கா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவரிடம் இருந்த புகைப்படச் சுருளை கழுவிய போது அவற்றில் பல கட்டடங்களின் படங்கள் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசாரணைக்காக அந்த இளைஞர் சி.ஐ.டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவ் இளைஞர் விடுதலைப்புலிகளின் உளவுப் பிரிவைச் சேர்ந்தவர் எனத் தாம் சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

[ஐ]

## கல்வி திணைக்களம் அனுமதி

சண்டிலிப்பாய், மே 27

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு மஸ்கன்ஸ் நிறுவனத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்ட "மஸ்கன் சுப்பிரமணியம் தொழில்நுட்ப நிலைய"த்தை மீண்டும் இயங்கச் செய்வதற்கு கல்வித் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

மேற்படி கல்லூரியின் பழைய மாணவர் சங்க கூட்டத்தின் வருடாந்த அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-135)

டீசல் எடுத்துவர அனுமதி மறுப்பு:

# யாழ். பல்கலைக்கழக 'வேலைகள் பாதிப்படையும் அபாய நிலை

யாழ்ப்பாணம், மே 27

யாழ் பல்கலைக்கழகத்திற்கு டீசல் எடுத்துவருவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்துள்ளது. இதனால் பல்கலைக்கழகத்தின் அன்றாட வேலைகள் பாதிப்படையும் அபாயநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

டீசல் எடுத்துவருவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்து இழுத்தடித்து வருவதால், பல்கலைக்கழகத்தின் நீர்விநியோகம், ஆய்வுகூட வேலைகள் மேற்கொள்வதற்கான மின்சாரத்தை வழங்கும் ஜெனரேற்றரை இயங்க வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக்கழகத்தின் ஜெனரேற்றர் இயக்குவதற்கு இம்மாதம் வரையுமே டீசல் கையிருப்பில் இருப்பதாகவும்—

ஒவ்வொரு மாதமும் முன்கூட்டியே டீசல் எடுத்து வரப்படுவதாகவும் மாதம் 11 பரல் டீசல் யாழ். பல்கலைக்கழகத்திற்கும் கிளிநொச்சிக்கு 5 பரல் டீசலும் தேவைப்படுவதாக யாழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் தெரிவித்தார். (ஒ-4)

## ஏவுகணைகள் குறித்து டிக்ஸிற்

புதுடில்லி, மே 27

"விடுதலைப் புலிகள் வசம் ஏவுகணைகள் இருப்பதை இந்தியா வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது"

இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதரும், வெளியுறவு அமைச்சின் செயலாளருமான ஜே. என். டிக்ஸிற் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"த வீக்" என்ற சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார், (ஐ-6)

# ஸாகிரா அகதிமுகாம் மீதே படையினர் ஷெல் தாக்கு

## இறந்தோர் விபரம் தெரிவிப்பு

மட்டக்களப்பு, மே 27

கடந்த செவ்வாயன்று படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலின் போது ஸாகிரா கல்லூரி அகதி முகாமில் இருந்த இரு பெண்களே உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தியாகராஜா இராஜலட்சுமி (40 வயது), தர்மலிங்கம் மாலதி (45வயது) ஆகிய இரு பெண்களுமே இறந்தவர்களாவர்

அகதி முகாமுக்கு உட்பட்ட சிலாமுனை, இருதயபுரம், ஜெயந்திபுரம், விஜிதபுரம் போன்ற புறநகர் பகுதிகளில் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 27 பேர் காயமடைந்து மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை - இருதயபுரம் பகுதியில் இருந்து படையினரால் அழைத்துச் செல்லப்பட்டவர்களில் ராசலிங்கம் மரியதாஸ் (38 வயது), ரவீந்திரன் ரகுநாதன் (21 வயது), நடராஜா பரராஜசிங்கம் (21 வயது), துரைராசா சந்திரசேகர் (29வயது) ஆகியோரே சுடப்பட்ட நிலையில் பனை வடலியில் கண்டுபிடிக்கப்பட்டவர்கள் ஆவர் [இ-3]

# பொது வைபவங்களில் ஜே. ஆர் பங்குபற்றார்!

கொழும்பு, மே 27

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா பொது நிகழ்ச்சிகளிலும், வைபவங்களிலும் கலந்து கொள்ள மாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவர்களின் ஆலோசனையின்படியே அவர் வைபவங்களில் கலந்து கொள்வதை ரத்துச் செய்துள்ளார் என்றும்— ஏற்கனவே இணக்கம் தெரிவித்த நிகழ்ச்சிகளிலும் அவர் பங்கு கொள்ள மாட்டார் என்றும்—

இது தொடர்பாக அவர் மனவருத்தத்தை தெரிவிப்பதாகவும் ஜெயவர்த்தனாவின் அலுவலகம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. [ஐ]

## பிரதமர் இல்லத்தை தாக்க திட்டம்

டோக்கியோ, மே 27

ஜப்பானில் அண்மையில் கைது செய்யப்பட்ட ஷோகோ அஸகாரா தலைமையிலான "அவும் ஷின்ரிக்யோ" மத அமைப்பினர் ஜப்பானிய பிரதமரின் வாசஸ்தலத்தையும், நாடாளுமன்றத்தையும் தாக்க திட்டமிட்டிருந்தனர் என்ற தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

"ஸரின்" நச்சு வாயுவை ஹெலிகொப்டர்கள் மூலம் பரவச் செய்துவிட்டு நூற்றுக்கணக்கான மத உறுப்பினர்கள் திரண்டு இத்தாக்குதலை நடத்த திட்டமிட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா சின்னத்துரை

கந்தையா சின்னத்துரை [யாழ். சென்றல் மோட்டேல் உரிமையாளர்] நேற்று [26-5-95] காலமானார்.

இவர் கமலாதேவியின் அன்புக்கணவரும், பவானி, ஜெயந்தன் (கனடா), சுரேஸ் (மினிபஸ் உரிமையாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசமனோகரன் [தபாலகம், தெல்லிப்பழை], கௌரி, செல்வஜோதி [கனடா] ஆகியோரின் அன்பு மாமனாரும். அஞ்சலா, நிரோசனா, சஜீவ், சுவர்னியா, சஜந்தா, தஷாஜினி சிறீசணனியா. பிரகாஷ் [கனடா] நிர்சன [கனடா], ஆரதி (கனடா] ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று [26-5-95] நடைபெற்று பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
க. இராசமனோகரன்.
(மருமகன்)

தொட்டியாலடி,
மாதனை–ர்மடம்.

[36818]

### சண்முகம் பொன்னுசசாமி

பலாலி கிழக்கு அம்மன் கோயிலடியை பிறப்பிடமாகவும், வண்ணார் பண்ணையை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் பொன்னுச்சாமி 26-5 95 நேற்றுக் காலமானார்

இவர் இராசமணியின் அன்புக்கணவரும் தங்கவேலு, சந்திரலிங்கம், யோகலிங்கம், கணேசலிங்கம், இராஜேஸ்வரி ஆகியோரின் தந்தையும் நவரட்ணத்தின் (ஜேர்மனி) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வண்ணார் பண்ணையில் 27 5-95 இன்று பிற்பகல் 1 00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
பொ. யோகலிங்கம்
(மகன்)

39, இந்துக்கல்லூரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(36819)

### கிழக்கில...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

எனினும் இராணுவம் இப்பகுதியில் ஸ்திரநிலையில் உள்ளதால் விடுதலைப் புலிகளுக்கு தமது திட்டத்தை நிறைவேற்றுவது அவ்வளவு இலகுவாக இருக்காது என்று எண்ணுகிறேன் —

விடுதலைப் புலிகள் தாக்கிவிட்டு, காடுகளுக்கு ஓடுவதால் முன்னரைப் போல நாமும் காடுகளுக்குச் சென்று பெரும் தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டும் — என்றும் அந்த மூத்த அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை விடுதலைப் புலிகள் மீது மிகப்பெரிய அளவிலான தாக்குதல்களை நடத்தும் பொருட்டு இராணுவ உயர் மட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதாக — பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியதாகவும் "ரொய்ட்டர்" செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

(அ)

### அமெரிக்க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றும்—

எனவே அதனை ரத்துச் செய்ய முடியாது என்றும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

ஒரு தலைப்பட்சமாக அந்த உடன்படிக்கையில் இருந்து இலங்கை அரசு விலகிக்கொண்டால் வைத்த ஆடைகளை கொள்வனவு செய்வதை அமெரிக்க அரசு நிறுத்திவிடக்கூடும் எனவும் அமைச்சர் கதிர்காமர் தெரிவித்தார்.

[ஐ-6]

### சிங்களவர்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் என தெரிவிக்கப்படுகிறது

இம்மாத ஆரம்பத்தில் புல்மோட்டை சரபாத் நகரில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் ஐந்து முஸ்லிம்கள் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

நேற்று கொல்லப்பட்ட 42 பேரில் 24 பேர் ஆண்கள் 12 பெண்கள் மற்றும் ஆறு பேர் சிறுவர்கள்.

காயமடைந்த ஐவர் இராணுவத்தினரால் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

கிராமத்தில் இருந்த குடிசைகளும் தீக்கிரையாக்கப்பட்டன.

[இ-ஐ-3]

### கொழும்பில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படக்கூடிய முயற்சிகளைத் தடுக்கும் நோக்கில் பாதுகாப்பு கண்காணிப்பு நடவடிக்கைகள் உஷார்படுத்தப்பட்டிருந்ததாக பாதுகாப்பு வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு நகருக்குள் பிரவேசித்த எல்லா வாகனங்களும் சோதனையிடப்பட்டன.

நாடாளுமன்றம், கட்டுநாயக்கா விமான நிலையம், கொழும்புத் துறைமுகம், ரயில் நிலையங்கள் என்பனவற்றின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்தது. (ஐ-3-6)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 27-05-1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org